# அவதாரிகை.

உலகத்தில் எல்லா ஜீவர்களும துக்கமின்றி யெப்போதும் சுகமா யிருக்கவேண்டுமென, தன் சுபாவ மல்லாத ரோகாதிகளை நீக்கி எப்போதுமபோல் சுகமா யிருக்கவேண்டு மென்பதுபோலக் கோருதலானும், யாவர்க்கும் தன்னிடத்திலேயே அத்தியந்தம் ப்ரீதி யிருப்பதானும், பிரியம் சுகத்திலன்றி யுண்டாகாததானும், நித்திரையில் ஒன்றுமின்றியே சுகமா யிருக்கு மனுபவத்தாலும் சுகமென்பது தானாகவே யிருக்க, அதனை யறியாத அக்ஞானத்தாலேயே அபாரசம்சாரத்தி லுழன்று, சுகந்தரும் மார்க்கம் விட்டு, இகபர போகாதிகளை யடைதலே சுகவழி யெனப் பிரவிருத்திக்கின்றனர். ஆனால் துக்கமற்ற சுகம கிடைக்கிறதில்லை. இதன் நேர்வழி காட்டவே ஸாக்ஷாத் ஸ்ரீ சங்கரர் சங்கர வேஷம் பூண்டு இச்சுகத்தின் பெருமையைக் கீர்த்திக்கும் வேதாந்தத்தின் பிரஸ்தானத் திரயங்களுக்கும் பாஷ்யம்செய்து வழி காட்டி நடந்துங் காட்டினர். அவற்றைப் பார்த்தலி லசமர்த்தராய் அதி தீவிர சுமேச்சுக்களான முமுக்ஷுச்களுக் கவ்வபயன் படாமையின் அவற்றி னந்தரங்கத்தை யிந்த விவேக சூடாமணிக் கிரந்தத்தால் வெளிப்படுத்தி முமுக்ஷுக்களுக்கு வேண்டிய விஷயங்களை சவிஸ்தாரமாய்க் கூறி நேர் மார்க்கங் காட்டி யிருக்கின்றனர்.

இதில், மனுஷ்ய ஜன்மம் கிடைப்பது துர்லப மென்றும், அதனால் தன் சுபாவ மோக்ஷானந்த மடையப் பிரயத்தனம் செய்ய வேண்டு மென்றும், ஞானத்தாலேயே மோக்ஷ மென்றும், ஞானம் விசாரத்தாலேயே வருமென்

றும், அதற்கு குருவை யடையவேண்டு மென்று குரு லக்ஷணம், சிஷ்ய லக்ஷணம், குரு சேவையையுங் கூறிப் பின்னும், சுகமடையத் தன் பிரயத்தனமே முக்கிய மென்றும் வாங் மாத்திர ஞானத்தால் சுகங் கிடையா தென்றும் சிரவணாதி விசாரமே மோக்ஷசாதன மென்று மாரம்பித்து, சரீரத் திரயங்களும் அநாத்மா, அசத்தியம், அசுகம் எனும் ஆத்மா அவைகட்கு விலக்ஷணம் அநாத்மாவில் ஆத்ம புத்தி பாரப அஞ்ஞானத்தால் வந்தது ஞானத்தால் நாசமா மென்று சிரவணத்தையுந் நிரூபண மதில் செய்யுங் கூட்ட விசாரத்தால் அசரீரத் திரயங்களான பஞ்ச கோசங்களையும் நானன்றென்னத் தள்ளி இவைகட்கு விலக்ஷணமாய், ஏகமாய் ஹிருதயத்தில் 'அஹம்' என்றிருக்கும் தவம் பரார்த்தமான ஆத்மாவை முஞ்சாப் புல்லினுள்ள ஈர்க்கையைப் போலப் பிரித்துக் காணும் மனனத்தையும், 'தத்' பதப் பதியான நாம ரூபப் பிரபஞ்சம் பிரஹ்மாகாரமென அவ்வுபாதி நீக்கத் தையும், 'த்வம்' பதார்த்தத்தையும், அவ்விரு பதார்த்தங் களான ஆத்மபர ஐக்கியத்தைத் தெரிவிக்கும் 'தத் த்வமஸி'' மஹா வாக்கிய உபதேசத்தையும், அந்த 'அஹமே பிரஹ்மம்' மென்றிருத்தலே மெய்ஞ்ஞானமென்பதையும், அங்ஙன மிருக்கினும் பூர்வ வாசனைகள் அது கிட்டாப்படிக்குத் தடை செய்யுமென்று, வாசனாத்திரயம், மூலமான அஹங் கார வாசனை இதன் விருத்தி ரூபமான பேத பாஹ்ய வாசனைகளையும், இவை நீங்கும் வரை மனதை யிருதயத் திருத்தி நிரந்தரம் பிரமாதமின்றிச் செய்யும் 'அஹம் பிரஹ்மம்' பிரஹ்மமே அஹம் மெனும் சஜாதீய சத்திய ஆன்மாகார விருத்தியைச் சிந்திப்பதாகிய பக்தி, யோகம், தியான மென்னப்பட்ட அதப்பாறு சந்தானமாகிற நிதித் தியாசனத்தையும், இங்ஙனம் ஹிருதயத்தில் மனமெனும் மத்தை நட்டு, அரணி, தயிர் இவற்றில் அக்கினி, வெண்ணெய் களை வெளிப்படுத்துவது போலப் பிரமாதமின்றித் தைல தாரை போல நிரந்தரம் செய்யும் பிரஹ்மாப்பியாச மதன

பலத்தாலொவிர்ப்பவிக்கும் சஹஜ நிர்விகற்ப சமாதியால் பிரயத்தனமின்றியே அகம் புறமெங்கும் எல்லாக் காலமும் ஏகமாய்ப் பிரகாசிக்கும் அபரோக்ஷப் பிரஹ்ம சாக்ஷாத்கார ஞானானுபவம் ஸித்தியாகும். அதனால் அக்ஞான வாசனை ஹிருதயக் கிரந்தியும், ஸம்சயங்களும், கர்மங்களும் நாசமடையும். அகண்டானந்த முக்தி சித்தியாம். என்று சாதனத்தோடு சமாதியையும்; இதில் பேத விகற்பங்களொன்றுமில்லை யென்பதையும், இதனை யடைதலே புருஷார்த்தம் இதனை யடைந்தவனே ஜீவன் முக்தன், பரோக்ஷஞானியன்று என்று ஜீவன் முக்தன் லக்ஷணம், அவனது கர்மத்திரய நிவிர்த்தி, இந்நிலை யடைந்த சிஷ்யனது ஸ்வானுபவம், ஜீவன் முக்தனது தேகாவசானம் அவனடையும் விதேக கைவல்யம் புனராவர்த்தியின்மை யென்னு மிவற்றால் இருவித முக்தியான சாக்ஷாத் காரத்தையும்; இவைகளை யனுசரித்த அனேக விஷயங்களையும் குரு சிஷ்ய சம்வாதமாய், விஸ்தாரமாகக் கூறி யிருக்கின்றனர். ஆனந்தானுபவ மடைவித்தற்கு இதனைப்போல் விஸ்தாரமாய்க் கூறியுள்ள கிரந்தம் வெகு துர்லபம். ஆசாரியர் கருணையா லிதனை யனுக்கிரகித்தனர். இஃது பிரஹ்ம ஸ்ரீ பிக்ஷு சாஸ்திரிகளவர்களால் அதி சுலபமான தமிழ்க் கவிதைகளாக வெகு நேர்த்தியாய் முன்னமே தமிழில் மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றது. நாநா வர்ணங்களோ டனேக ரூபங்களாகச் செய்து வைத்திருக்கும் ஒரே மிட்டாயிலே அவரவர்க் கிஷ்டமானதை வாங்கிக் குணதோஷம் பாராதுண்டு அவ்வொரே மிட்டாயின் ரஸத்தை யவிவேகிக ளனுபவித்துக் களிக்கின்றன ரல்லவா!

அவதாரிகை முற்றும்.

# ஸ்ரீ விவேக சூடாமணி

## பிழை திருத்தம்.

### அவதாரிகை.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 13 | தோசா | யதோசா |
| ,, | 14 | யவர்த்தி | வர்த்தி |

### நூல்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 4 | திரவிய | திரய |
| ,, | 26 | சாமா | சாம |
| 4 | 5 | மின்றி | மன்றி |
| ,, | 27 | த்திலே | த்திலேயே |
| 6 | 3 | எனை | ஏனை |
| 8 | 22 | சாமா | சாம |
| 13 | 8 | வாசரு | வசரு |
| ,, | 21 | கூடுவர் | கூறுவா. |
| 15 | 31 | தமே | தமோ |
| 16 | 14 | க்கும் | க்கும். |
| ,, | 31 | மறும் | மற்றும் |
| ,, | ,, | இதுவேற் | இதுவே |
| 8 | 10 | காது. | காது, |
| 20 | 17 | மாயத் | மாய்த் |
| 21 | 15 | பட்ட | படத்தக்க |
| 23 | 30 | வர்ண | வர்ண, |
| 24 | 24 | மாய் | மாய், |
| 26 | 26 | லாப | லாப, |
| 27 | 22 | காக்ஷி | சாக்ஷி |
| 30 | 7 | அத்வீதிய | அத்விதீய |
| 33 | 26 | மின்றி | மன்றி |
| 35 | 13 | கவே | வே |
| 39 | 5 | தாதா | தா |
| 48 | 6 | யற்று | யற்ற |
| 53 | 4 | வாய், | வாய். |
| 61 | 25 | கா(ணி) | ராணி |
| 62 | 30 | சபப | கப்ப. |
| 63 | 1 | யிலலை | யில்லை. |
| ,, | 13 | டது | டது. |
| 64 | 6 | கும் | கும். |

இனி ஏதேனும் பிழையிருப்பின் அசாரநீரகற்றி சாரக்ஷீரம் கிரகிக்கும் ஹம்சம்போன்று அப்பிழையகற்றி சாரமான விஷயத்தினை கிரகித்துக்கொள்வது விவேகிகள கடமையாகும்.

பரப்பிரஹ்மணே நம:

# ஸ்ரீ விவேக சூடாமணி.

அகமொடு மூல வவித்தையு மகன்றிட
வகமக பாக வல்லும் பகலற
வகமொரி ராத்ம தேவன் பதத்தினி
லகமகிழ் வாக வனிசம் ரமிக்கவே.

## குருஸ்துதி.

அதி தீவிர மோக்ஷாதிகாரிகள் கஷ்டப்படாமல் சுலபமாக, தாமே யறிந்து அமிர்தத்வத்தை யடையத் தக்கதாயினும் வேதாந்தார்த்தங்களின் ஹிருதயத்தை விஸ்தாரமா யிவ்விவேக சூடாமணி கிரந்தத்தால் வெளிப்படுத்தி சிவ சொரூபமாய்ப் பிரகாசிக்கும் ஜகத் குரு ஸ்ரீமச் சங்கர பகவத் பாத சரணார விந்தங்களில் என் ஹிருதயாரவிந்தத்தை யொன்றுபட ஸமர்ப்பிக்கின்றேன்.

## நூல்.

ஸகல வேதாந்த ஸித்தாந்தங்களுக்கே கோசரராயும் இதர பிரமாணங்களா லறியப்படாதவராயும் விளங்கும் பரமானந்தமய ஸ்ரீ கோவிந்த சத்குருவுக்கு நமஸ்காரம்.

ஜீவர்களுக்கு மனுஷ்ய ஜன்மம் கிடைப்பதே மிகு துர்லபம். அதில் புருஷனாய்ப் பிறத்தல், அதிலும் பிராம்மணனாதலும், அதனில் வேதமோதும வைதிக

தர்ம மார்க்கத்தில் நடத்தலும், அதனினும் வித்வானாத லும், அதனில், ஆத்மா னாத்ம விசாரம் பிறத்தலும், அத னினும் ஸ்வானுபவ ஞான மடைதலும் மிக வருமை. அந்த ஞானத்தால் பிரஹ்மாகாரமாக விருக்கும் மோக்ஷ மானது அனந்த கோடி ஜன்மாந்தரங்களில் செய்த சுகிர் தங்களா லன்றிக் கிடையாது இவைக ளெல்லாவற்றை யும் கிரமமா யடையா விடினும் ஈசுவரானுக்கிரக காரண மாய் அருமையான மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம் மகாத் மாக்களின் சங்கம் என்னும் இம்மூன்றும் கிடைக்கின் மோக்ஷமடைய இதுவே போதும்.

எத்தவத்தாலோ! கிடைத்தற்கரிய மனுஷ்ய தேகம் பெற்று, சுருதியி னர்த்தங்களை யறிவதற்கேதுவான புரு ஷத்துவ மடைந்தும் அசத்தான தேகாதிகளி லபிமானத் தால் தன் மயமான சாசுவத மோக்ஷத்தை யடைதற்கு எத்தனஞ் செய்யாத மூடன் ஆத்ம ஹத்தி (தற்கொலை) செய்தவனாவான். அவனினும் மூடாத்மா எவனிருக்கின் றனன்?

சாஸ்திரங்கள் படித்தாலும், தேவபூஜை பண்ணி னாலும், கர்மங்கள் அனுஷ்டித்தாலும், தேவதைகளை யுபா சித்தாலும், இன்னுமென்ன செய்தாலும் பிரஹ்மாத் மைக்ய ஞானத்தாலன்றி எத்தனை கோடி கற்ப மாயினும் முக்தி சித்தியாது 'தனத்தினாலே (தனத்தால் செய்யப் படும் கர்மத்தால்) மோக்ஷ ஆசையே யில்லை' என்னும் சுருதி கர்மங்கள் மோக்ஷ காரணங்களன்று என்று நன் றாயக் கூறி யிருத்தலால் மோக்ஷமடைய விசிக்கும் தீரன், பாகிய விஷய சுகங்களி லாசையை முற்றுந் துறந்து, மகாத்மாவாய சாந்தராயுள்ள ஸத்குருவை யடைந்து, அவ ருபதேசித்த பொருளில் மனதை நிறுத்தி சந் ததம் தியானிக்கும் யோகத்தா லடைந்த அனுபவ ஞான நிஷ்டையாகும் கப்பலால் சம்சார சமுத்திரத்தில் மூழ்

கிக் கிடக்குந் தன்னைத் தானுனே மோக்ஷமாகின்ற கரையின் மேலேற்றிக் கொள்ளவேண்டும். ஆதலால் தைரியசாலியா யுள்ளவன் தார, புத்திர, தனமென்னு மீஷணைத் திரவியங்களை நீக்கி, கர்மங்க ளனைத்தையுந் துரத் தள்ளி ஜனன மரண சம்சார பந்தம் நீங்கி மோக்ஷ மடைவதற்கே பிரயத்தனம் பண்ணவேண்டும். கர்மங்கள் சித்த சுத்திக்காக ஏற்பட்டனவே யன்றி வஸ்துவை யறிதற்கன்று. வஸ்து ஞானம் விசாரத்தால் வருமேயன்றிக் கோடி கர்மங்களாலும் சித்திக்காது. ரஜ்ஜுவில் ஸர்ப்பத்தைக் கண்டு பிரமித்தோனுக்கு அப்பிராந்தியா லுண்டான சர்ப்ப பயத்தையும், அதனுல் வந்த துன்பத்தையும் நிவிருத்திக் கும்படியான 'இது ரஜ்ஜு தான்' என்னும் ரஜ்ஜு ஞானம் எங்ஙனம்: அறிந்த ஆப்தன் சொல்லினுலும், நன்ருய் விசாரித்தலாலும வருகின்றதோ? மற்ற எதனுலும் வர வில்லையோ? அங்ஙனமே குரு உபதேசத்தாலும வஸ்து விசாரித்தாலும் பிரஹ்ம ஞானம வரவேண்டுமே யன்றி ஸ்நான, தான, பிராணுயாமாதிகளால் ஒருக்காலும் அவ்வஸ்துவை யுணர்தல் கூடாது. ஆதலால் ஆத்ம வஸ்துவை யறிய வேண்டிய முமுக்ஷு நிராசை யுற்ற பிரஹ்மவித்தாய், கிருபா சாகரராயுள்ள உத்தம குருவை யடைந்து ஆத்ம விசாரமே செய்ய வேண்டும். முக்கியமாய் விசாரத்தாலேயே அதிகாரிக்கு ஞான சித்தி யுண்டாம். தேசம், காலம், ஈசுவரானுக்கிரக மிவை ஞானம் பெற ஸஹாயமா யிருக்கும்.

மேதாவியாய், சாரத்தைக் கிரகித்து அசாரத்தைத் தள்ளக்கூடிய சாமார்த்தியவானுய், சாஸ்திரங்களில கூறியுள்ள லக்ஷணங்கள் யாவும் நன்றா லமையப் பெற்றோன் ஆத்ம விசாரத்தில் அதிகாரி யாவன். என்னை? விவேகியாய், விரக்தனுய், சமதமாதி சத்குண ரஹிதனுய் தீவிர முமுக்ஷுவாயுள்ள சாதன யுக்த அவ்வதிகாரிக்கே பிரஹ்ம விசாரம் செய்ய யோக்கியதை யுண்டாகும்.

சாதனங்கள் (1) நித்தியாநித்திய வஸ்து விவேகம், (2) இகாமுத்திரார்த்த பலபோக விராகம், (3) சமாதிஷட்க சம்பத்தி, (4) முமுக்ஷுத்வம், என நான்கு வகைமாக மகான்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வதிகாரிகளிவை யிருந்தாலே பிரஹ்ம நிஷ்டை கிடைக்குமின்றி யின்மேல் சித்தியாது. இவற்றுள் (1) பிரஹ்மமே சத்தியம், ஜகத்து மித்தையென்னும் நிச்சயமே நித்யாநித்ய வஸ்து விவேகமாம், (2) ஈசுவர பிரஹ்மா பரியந்தமுள்ள அநித்திய போக்கிய வஸ்துக்களின் அநித்திய துக்க தோஷங்களை பிரத்தியக்ஷமாய்ப் பார்ப்பதாலும், சாஸ்திரங்களால் கேட்பதாலும் அவ்வகளி லுண்டாகும் வைராக்கியமே இஹாமுத்திரார்த்த பலபோக விராகமாம், (3) க. விஷயங்களிலுள்ள தோஷங்களை படிக்கடி நினைப்பதாலாம் அவைகளில் விரக்தி யடைந்து மனமானது தன் ஞேய லக்ஷ்யத்தி லிருத்துவது சமமாம். உ. விஷயங்களிற் செல்லும் ஞான, கர்ம இந்திரியங்களைத் திருப்பி அந்தந்த கோளக (ஸ்தான) த்திலேயே யிருக்கச் செய்வது தமமாம். ௩. மனது பூர்வ வாசனையால் மறுபடியும் விஷயங்களை நினையாது தன்னிடத்திலேயே ஸ்திரமாயிருக்கில் இதர சாதனங்களை விட்டுவிடலே உபரதியாம். ச. எவ்வளவு துக்கங்கள் வரினும் தடை செய்யாமலும், அவற்றிற்காக யேங்கி யழாமலும் தைரியத்தோடவைகளை சகித்தல் திதிக்ஷையாகும். ரு. வேதாந்த சாஸ்திரமும் குருவாக்கியமும் சத்தியமெனக் கொள்ளும் நிச்சயமே பிரஹ்ம சாக்ஷாத்காரத்திற்கேதுவான சிரத்தையெனப்படும். சா. சர்வ யத்தனங்களாலும் சஞ்சல ஸ்வபாவமாயுள்ள சித்தத்தை, பரிசுத்தப் பிரஹ்மத்திலே ஸ்திரமாயிருத்தலே சமாதானமாம். அதனால் மனம் போனபடி போகவிடுதல் ஸமாதி யன்று. இவ்வாறுங் கூடி சமாதிஷட்க சம்பத்தி யென்னப்படும். (4) அஞ்ஞா

யஞ்ஞானத்தால் வந்த அகங்காராதி தேகாந்தமாயுள்ள பந்தத்தை ஸ்வாத்ம ஞானத்தால் தொலைப்பதற்குள்ள இச்சையே முமுக்ஷுத்வமாம். அம்முமுக்ஷுத்வம் மந்தம் மத்திமமாயிருந்தாலும் வைராக்கியத்தாலும் சம கபத்திகளாலும், குரு அனுக்கிரகத்தாலும் கிரமமாய் வளர்ந்து பருவமுற்றுக் காலாந்தரத்தில் பலனைக் கொடுக்கும். வைராக்கியத்தோடு கூடின முமுக்ஷுத்வம் எவனிடத்தில் தீவிரமாயிருக்கின்றதோ, அவனிடத்திற் கூடிய சமதமாதிகளானவை ஆரம்பத்திலேயே பலனைத் தரும். ஆனால் எவனிடத்தில் மந்தமாயிருக்கின்றதோ அவனிடத்தில் சமதமாதிகள் ஆபாசமாகவே பொருந்தும்.

மோக்ஷமடைதற் கேதுவாயுள்ள சாமக்கிரி (சாதனங்) களில் பக்தியே மிகவும் சிரேஷ்டமானதாகும். ஸ்வஸ்வரூபத்தின் அனுசந்தானமே பக்தியாகும் என்று மகாத்மாக்கள் சொல்லுகின்றனர்.

முன் சொன்ன சாதன ஸம்பந்நனும் ஆத்ம தத்துவமடைய விசாரிக்கும் அதிகாரி, சனனை பிரபிந்தவா பவ பந்தத்தை நிவர்த்திப்பவராய், ப்ரகடவாதராய், சர்வ புமறிந்தவராய், நிஷ்பாபராய், காமத்தை வென்றவராய், பிரஹ்மவித் சிரேஷ்டராய், விறகற்ற அக்கினிபோல பிரஹ்மத்தில் விச்ராந்தியடைந்தவராய், காரணமுமின்றியே கிருபாசாகரராய், சரணடைந்த சாதுக்களுக்குப் பரம பந்துவாயுள்ள ஸத்குருவை யடைந்து அன்போடும் நமஸ்கரித்துப் பயபக்தியோடு செய்து வந்த நானாவித சுச்ருஷைகளால் பிரசன்னரான (சந்தோஷமுற்ற) குருவிடம் தானறிய வேண்டுவதை வினவுறுன்,—“ஸ்வாமின்! தீனபந்தோ! நமஸ்காரம். பயங்கரமான பவசாகரத்தில் வீழ்ந்து தவிக்கும் என்னைத் தங்கள் கருணா கடாக்ஷமாகிற கப்பலால் கரையேற்றிவைக்க வேண்டுகின்றேன். கருணாவாரிதே! துராதிருஷ்ட (பாப)க

காற்றில் லுற்றி தப்பிப்போக வழியின்றிச் சூழ்ந்தெரியும் சம்சார தாவாக்கினி (காட்டுத்தீ) யால் தபிக்கப்பட்ட என்னை காருண்யாமிருத வர்ஷத்தால் சாந்தப்படுத்தத் தங்களைப் பன்முறை பிரார்த்திக்கிறேன். சாந்தராய், மகாத்மாக்களாய், வஸந்த காலம்போல் லோகத்திற்கு ஹிதமே செய்யப்பட்டவர்களாய், பவசாகர பயத்தைக் கடந்து மற்றவர் பயத்தையும் நீக்கி வைப்பவரா யிருக்கும் தங்களை யொத்த ஸாதுக்களுக்கு சூரியன துஷ்ண கிரணத்தால் தபிக்கப்பட்ட ஜகத்தைச் சந்திரன் சீதள கிரணத்தால் தானே ரக்ஷிக்கின்றதுபோலப் பவத்திற் கஞ்சிச் சரணகதரான எம்போலிகளை நிர்ஹேதுகமாய்க் காத்து ரக்ஷித்தல் ஸ்வபாவமே யாதலால் சம்சார தாபத்தால் பீதி யடைந்து வேறு கதியின்றி தீனனாய்ச் சரணாகதனான என்னையும், ஜென்ன மரண சம்சாரத்தினின்றும் ரக்ஷிக்கத் தங்களுக்கே பாரம். ஸ்வாமீ! பவதுக்க மென்னும் காட்டுத் தீச்சுவாலைகளால் தாபமடைந்த என்னை பிரஹ்மானந்தானுபூதியால் பரம சீதளமாய், பரிசுத்தமான தங்கள் முகமென்னும் கலசத்தினின்று வெளிப்படும் வாக்கியமாகின்ற அம்ருத தாரையால் சீக்கிரம் நனைப்பீர்களாக. தங்கள் கடாக்ஷ வீக்ஷண்ய லேசத்துக்கும் பாத்திரராய் ஸ்வீகரிக்கப்பட்டவர்கள் தன்னியராகின்றனரன்றே? இப்பவசாகரத்தை யெப்படி நான் கடப்பேன்? இதற்கென்ன உபாயம்? எனக்கென்ன கூன கதி? யென்றொன்றும் தெரியவில்லை. தாங்கள் தான் இந்தச் சம்சார துக்கத்தை யகற்றி ரக்ஷிக்கவேண்டும்." சம்சார தாபானலத் துக்காற்றும் இவ்வாறு பிரலாபித்து, தன்னை விதிப்படி சரணம் பிராபித்தவனாய் சொன்னபடி செய்யும் சாந்த சித்தனை சிஷ்யனை பிரஹ்ம ஞானியாயுள்ள ஆசாரியர் கருணை நிறைந்த சீதள திருஷ்டியால் வீக்ஷித்து அபயந் தந்து தயையினாற்றானே தத்துவோபதேசஞ் செய்கின்றார்.

"வித்வானான சிஷ்யனே! பயப்படாதே, இனியுனக்கு அபாயமேயில்லை: அபாரமாய், பயங்கரமாயுள்ள சமுசார சாகரத்தைத் தாண்டக்கூடிய மகத்தான ஓருபாயமிருக்கின்றதைத் தெரிவிக்கின்றேன். சாதுக்களாயுள்ள யதிகள் எதனால் இப்பவத்தைக் கடந்தார்களோ? அவ்வுபாயத்தால் நீயும் எவராலுங் கடத்தற்கரிய இப்பவசாகரத்தைக் கடந்து பரமானந்தம் பெறுவாயாக. வேதாந்தார்த்த விசாரந்தாலே உத்தமமான தத்துவ ஞானமுண்டாகும். அதனால் இவ்விடத்திலேயே சம்சார பந்தம் அத்தியந்த நாசமாம் 'முமுக்ஷுவுக்கு சிரத்தை, பக்தி, தியான யோகம் இவை மோக்ஷ ஹேது வென்று சுருதியே கூறலால் இவ்வுத்தம சாதனத்தைப் பெற்று நிரந்தரம் சாதித்துவரின் அஞ்ஞானத்தால் வந்த தேக பந்தம் நீங்கிப் போகும் எப்போதும் பரமாத்ம ஸ்வரூபமாகவேயிருக்கும் உனக்கு அஞ்ஞானத்தாலேயே இவ்வுத்தம சம்சார பந்தம் வந்தது. ஆதலால், ஆத்மானாத்ம விசாரத்தால் பிறந்த ஞானமாகிற அக்கினியானது அஞ்ஞான காரியமான சம்சார பந்தத்துக்கத்தை சமூலமாக (காரண வஞ்ஞானத்தோடுகூட) எரித்து விடும்" என்றுரைத்த குருவைப் பார்த்து, ஸ்வாமீ! பந்தமாவது எது? எப்படி வந்தது? இருப்பதெங்ஙனம்? நசிப்பதெப்படி? அனாத்மா எது? ஆத்மா தான் எது? ஆத்மானாத்ம விவேகமெது? தங்கள் முகத்தினின்று முத்தரங்கேட்டு யான் கிருதார்த்த னாகும் பொருட்டுக் கிருபையாய் இப்பிரச்னைகளைக் கேட்டனுக்கிரகிப்பீராக.' என்று கேட்ட சிஷ்யனை நோக்கிக் குருவானவர்

"சிஷ்யனே! அஞ்ஞானத்தால் வந்த பந்தம் நீங்கிப் பிரஹ்மமாயிருக்கும் ஆசையைக் கொண்டனை யாதலின், நீயே தன்யன், கிருதகிருத்தியன், உன் குலமுன்னால் பவித்திரமாயிற்று. பிதாவின் ருணத்தை (கடனை) நீக்கப் புத்திராதி பந்துக்களுண்டு. அங்ஙனமே ஒருவனுக்குத் தலை

பாரத்தா லுண்டான சிரமத்தை நிவிருத்திக்க அன்னிய ரிருக்கின்றனர் ஆனால் தனக்குப் பசியாதியால் வந்த துக்கத்தை புஜித்தலாதியால் எங்ஙனம் தானே யகற்ற வேண்டுமோ? மற்றவரால் கூடாதோ? தனக்கு வந்த வியாதியைத் தானே மருந்துண்டு பத்தியமிருந்து போக்க வேண்டுமென்றி மற்றொருவ ரனுஷ்டிக்குங் கர்மங்களால் நீங்காதோ? அங்ஙனமே தன்னஞ்ஞானத்தால் வந்த பந்தத்தைத் தன் முயற்சியாலேயே நீக்க வேண்டுமென்றி, அனேகங் கோடி கல்பமாயினும் அவித்யா காம கர்மாதி ரூபமான பாசபந்தத்தைத் தவிர்க்க எவரால் தான் சாத்தியமாகும்? தனது ஸ்பஷ்டமான (பிரதிபந்த மின்றிய) ஞான நேத்திரத்தால் ப்ரஹ்மத்தை யறியலா மல்லாமல் மற்றொரு பண்டிதனாலு மறியக் கூடாது. சந்திரனை கந்தமான தன் நேத்திரத்தாலன்றி அன்னியர் பார்த்தலால் தான் பார்க்கக்கூடுமோ? பிரஹ்மாத்மைக்கிய ஞானத்தாலன்றி சாங்கியம், யோகம், கர்மம், வித்வத்வம் முதலிவைனாலும் மோக்ஷம் கிடைக்காது. வீணையினது ரூப சௌந்தர்யமும் தந்தியால் மதுரமாகக் கானஞ் செய்தலும் எப்படி ஜனங்களுக்கு சந்தோஷ மாத்திர முண்டாக்குகிறதன்றி சாம்ராஜ்யாதி பத்யத்தருவ தில்லையோ? அப்படியே மதுரமான வாக்கோடு சாதுர்யமான வசனமும், சாஸ்திரார்த்தங்களை வெகு சாமார்த்தியமாய்ச் செய்யும் வியாக்யானமும், வித்வான்களது சிரேஷ்டமான வித்வத்வமும் போகத்தைக் கொடுக்குமன்றி மோக்ஷத்தைக் கொடாது. பரதத்துவத்தை யறியாவிட்டால் சாஸ்திரங்கள் படித்தல் பயன்கொடாமையின் நிஷ்பலமாம். பரதத்வத்தை யறிந்த பின்னரும் சாஸ்திரங்கள் படித்தல் வேறு பயனின்மையின் நிஷ்பலமே யாகிறது. ஆதலால், மனமயக்கத்திற் கேதுவான சாஸ்திரஜாலமாகின்ற மகாரண்யத்தைக் கடந்து தத்துவ ஞானியாகிற குருவால் ஆத்ம தத்துவத்தை யனுபவமா யறிய வேண்டும். அஞ்ஞான

ஸர்ப்பத்தால் கடியுண்டவர்க்கு ஆத்ம ஞானமாகிற சஞ்ஜீவியையன்றி வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் மந்திரங்களாலும் மற்ற மருந்துகளாலும் என்ன பிரயோசனம்! ஔஷதமுண்டு கொள்ளாது 'மருந்து' எனச் சொல்வதால் தனது ரோகம் போகாததுபோல, அபரோக்ஷ அனுபவ ஞானமில்லாமல் 'அஹம் பிரஹ்மாஸ்மி' என வாக்கால் கூறுவதால் ஜன்ம பந்தம் நீங்காது. சத்துருக்களை நாசஞ்செய்யாமலும், அகில பூமண்டல சாம்ராஜ்யத்தை யடையாமலும் 'நான் ராஜா' என்று சொல்வதால் எப்படி அரசாளுகை மாட்டானோ! அப்படியே அனாத்ம திருசியத்தை நாசஞ் செய்யாமலும் ஆத்ம தத்துவத்தை யனுபவமா யறியாமலும் 'பிரஹ்மமே வாஹம்' என்னும் வாக்கு மாத்திரத்தால் பிரஹ்ம மாத்ரமாயிருக்கும் முக்தியடைய மாட்டான். எங்ஙனம், பூமியிலுள்ள புதையலானது அறிந்த ஆப்தனால் கேட்டு, பூமியை வெட்டி, அதன்மேல் மூடியுள்ள கல்லை நீக்கி வெளியே எடுத்தலாலடையப்படுமோ? சொல் மாத்ரத்தா லடையப்படாதோ? அங்ஙனமே பிரஹ்மாத்மத்தை யறிந்த குருவினிடத்தில் சொரூப லக்ஷணத்தைச் சிரவணஞ் செய்து, அதனை மனனம் பண்ணி, நிரந்தரம் தியானிப்பதா லுண்டாகும் அபரோக்ஷ அனுபவ ஞானத்தா லடையலாகுமல்லாமல் மாயையால் மறைபட்டுள்ள ஸ்வஸ்வரூபத்தைக் குதர்க்க யுக்திகளா லடையக்கூடாது. ஆகையால் விவேகி யானோர் ஸர்வப் பிரயத்தனத்தாலும் பவ பந்தம் நீங்கி மோக்ஷமடைதற் பொருட்டு, ரோகாதிகளை நீக்குதலில் போலத் தாங்களே முயற்சி செய்ய வேண்டும்.

சிஷ்யனே! நீ கேட்ட கேள்வியானது உத்தமமாய், சாஸ்திர ஞானிகட்குச் சம்மதமாய், சூத்திர சமானமாய், சூக்ஷ்மார்த்தமுள்ளதாய், மோக்ஷத்தை யபேக்ஷிப்பவனா லறியக்கூடியதா யிருக்கிறது. இதற்கு யான் கூறும் முத்தரத்தைச் சாவதான சித்தனாய்க் கேட்பாயாக. அதனால்

உடனே பந்தமகன்றுபோம். மோக்ஷமடைதற்கு அநித்திய வஸ்துக்களில் வைராக்கியமடைதல் முந்தின ஹேது வாகும். பின்னர் சமம், தமம், திதிக்ஷை, ஸர்வ கர்ம பரித்தியாகம் (உபரதி), என்னுமிவை கிரமமாக ஏதுக்களாம். அதன்பின், வேதாந்த சிரவணம், பின்னர் தன் மனனம். அதன் பின்பு இடைவிடாமல் வெகு காலஞ் செய்யும் பிரஹ்மத் தியானமும் ஏதுவாகும். அந் நிரந்தரத் தியானத்தா லுண்டாகும் நிர்விகற்ப சமாதியால் பெறப்பட்ட அபரோக்ஷப் பிரஹ்ம சாக்ஷாத்கார ஞான பலத்தால் விவேகியானவன் இவ்விடத்திலேயே மோக்ஷானந்தத்தை யனுபவிக்கின்றான். இதுவே மோக்ஷ சாதனக் கிரமமாகும். நீ யறிய வேண்டிய ஆன்மானன்ம விவேகத்தை யிப்போது சொல்லுகிறேன். அதனை நன்றாய்க் கேட்டு மனதில் தரித்துக் கொள். இரண்டில் முன்னம் அநாத்மாவைக் கேட்பாயாக.

மஜ்ஜை (மூளை), அஸ்தி, மேதஸ் (கொழுப்பு), மாம்சம், ரக்தம், சர்மம், சுக்கிலம், என்னும் ஸப்த தாதுக்களூற்றும், பாதம், துடை, மார்பு, புஜம், முதுகு, சிரசு முதலிய அங்க உபாங்கங்களோடு கூடியதாய், நான், எனது எனவே யாவராலு மறியப்பட்டு, மோகத்திற்கு முக்கிய ஸ்தானமாய், பிரத்தியக்ஷமா யிருக்கு மிதுவே ஸ்தூல தேகமென் றறிஞர் கூறுகின்றனர். இந்த ஸ்தூல தேகமானது ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி யென்னும் சூக்ஷ்ம பூதங்கள் (தன்மாத்திரைகள்) தத்தம் அம்சங்களில் அன்யோன்யம் கலந்து பஞ்சீகரித்ததா லுண்டான ஸ்தூல பூதங்களாலாயதாம். அவ்வைந்து தன் மாத்திரைகளுமே சப்தாதி பஞ்ச விஷயங்களாயிருந்து விஷய போக்தாக்களான ஜீவர்க்கு சுக சாதனம் போலத் தோன்றும், அஞ்ஞானிகளாகின்ற எந்த மூடர் ராகம் (ஆசை) ஆகின்ற பாசத்தால் இவ்விஷயங்களில் கட்டுப் படுகின்றாரோ? உடனே யவர் தங்கள் கர்மம் என்னும்

தூதனு விழுக்கப்பட்டவராய், அக்காமானு சாரமாக மேலும், கீழும் போகக் வரத் துடையவராய், மிகவு மலைந்து துக்கிப்பர். இரசபதாதி பஞ்ச விஷயங்களில், சப்தத்தால் மானும், ஸ்பரிசத்தால் யானையும், ரூபத்தால் பதங்கமும், ரசத்தால் மீனும், கந்தத்தால் வண்டும் ஒவ்வொன்றிலாசை வைத்தே யிறக்குமாயின் இவ்வைந்திலும் ஆசையுள்ள மனுஷ்யன் துர்க்கதி என்னவாகும்? விஷயமானது தன் தோஷத்தால் கிருஷ்ண சர்ப்ப (கரு நாக) விஷத்திலுங் கொடியதாகும் எனெனின், விஷமானது உட்கொண்டவனை மாத்திரங் கொல்லும் விஷயமோ கண்ணுற கண்டவனையும், நினைந்தவனையுங் கூட நசிக்கச் செய்கின்றது. எவனொருவன் நீக்கறகரிய விஷயாசை யெனனும் பாசத்தை திடவிராகத்தா லறுத்து அதினின்றும் விடுபடுகிறானோ அவனே மோக்ஷ மடைவனன்றி, அன்னியன் ஷட சாஸ்திர பண்டிதனாயினும் முக்தி பெறமாட்டான். திட வைராக்கியமின்றிப் பவசாகரத்தைக் கடந்து மோக்ஷதீரஞ் சார யத்தனிக்கும் முமுக்ஷுவின் கழுத்தை ஆசையாகிற முதலையானது பிடித்து அதி வேகமா யிழுத்துப்போய க்ஷணத்தில் அச் சமுசார சமுத்திர மத்தியி லமிழ்த்தி விடும். ஆதலால், எந்த முமுக்ஷு விஷயாசை யெனனும் முதலையை திடவிராகமெனனும் வாளினால் கொல்லுகிறானோ அவனே பவக்கடலின முக்தி தீரத்தைத் தடையாதுமின்றி யடைவான். நல்ல புத்தியில்லாதவனும் மாறி மாறித் தோனனும் விஷய பாதாகத்தில் பிரவேசிப்பவன், மேனமேலும் நரக மனுபவித்து துக்கிக்கட்டேபோவன் சுபுத்தியுள்ளவன் தன் யுக்தியால குருபதேசமார்க்கமே சென்று நற்கதியை பெறுவன். இது சத்தியம். ஆதலின உனக்கு மோக்ஷமுற விருப்பமிருக்கும்பக்ஷத்தில விஷயங்களை விஷம்போலும் தூரத்தில தள்ளிவிட்டு, சந்தோஷம், தயை, க்ஷமை, ஆர்ஜவம் (ருஜு மார்க்கம்), சாந்தி, தாந்தி முதலாய ஸத்குணங்களை அமிருதம் போலப் போதுங் கைக்கொண்டு தேகாபிமானத்

தால் செய்யும் சகல காரியங்களையும் விட்டு அவித்தை யால் செய்யப்பட்ட பந்தமோக்ஷ (நீக்க)த்திற்கே சாவ காலமும் எத்தனஞ் செய். இந்தத் தேகமோ பாராத்தமாய் (மண், தீ, மிருக. பக்ஷியாதிகட்கிரையாய்) இருக்கின் றது. எவன் தன்னை மறந்து தேகத்தைத் தானாக வபிமா னித்துப் போஷிக்க எண்ணுகின்றானோ அவன் ஆத்மஹந் தா ஆகின்றான். சரீரபோஷணையில் புத்தியுள்ளவனாய் எவன் ஆத்மாவை அறிய இச்சிக்கின்றானோ அவன் முதலையைக் கட்டையென்று பிடித்து அக்கரைக்கு நதி தாண்டச் செல்லபவ னுவன். தேகாதிகளிலுள்ள மோகமே முமுக்ஷுவுக் குப் பெரியமிருத்யு வாகும். எவனிந்த மோகத்தைத் வென்றானோ அவனே மோக்ஷபதம் பெறுவானாதலால் அதனை வென்று முனீச்வரர்கள் அவ்விஷ்ணுவின் பரம பத (வியாபக பரமபத) மடைந்தார்களோ தேக, தார சுதாதிகளிலுள்ள அபிமானத்தை ஜெயித்து நீயு மந்த மோக்ஷபதம் பெறுவாயாக. தோல், மாமிசம், நர மபு, மேதஸ், மஜ்ஜை, அஸ்திகளை யொருங்குடையதாய், மூத் திர, புரீஷ (மல)ங்களால் பூரணமாயுள்ள இந்தத் தேகமா னது மிகவும் நிந்திக்கத்தக்கதாம். பூர்வ ஜன்மாந்தர கா மாநுசாரமாய், பஞ்சீகிருத ஸ்தூல பஞ்சமகாபூதங்களா லுற்பன்னமான இந்த ஸ்தூல சரீரம், கிரகஸ்தனுக்கு கிரகம்போல விஷய போகங்களை ஆதாரமாயிருந்தநுப விக்கும் ஸ்தான போகாலயமாகும். இதனவஸ்தை ஜாக்கிரம் எனப்படும். மனோ சந்தன ஸ்திரியாதி நானாவிசித்திரஸ் ஸ்தூல போகங்களைப் பாஹ்யேந்திரியங்களால் ஆத்மா கர்மேந்திரியங்களுடன் அத்தியாசத்தால் கூடி யனுபவிக்கும் காலம் ஜாக்ரமெனப்படுதலால் இவ்வவஸ் தையிலேயே ஸ்தூல தேகமறியக் கூடியதாம். இதனாச்சிர யத்தாலேயே புருஷனுக்குப் பாஹ்ய சம்சாரமனைத்தும் வந்ததென்றறி. உற்பவம், வளர்தல், ஜரா, மரணமாதி யித்தேகத்தின் தர்மங்களாம். சைசவம், கௌமாரம்

யௌவனம், வார்த்தக்கிய மிவை இதன் அவஸ்தாபேதங் களாம். வர்ண ஆசிரமமாதி நியமமாகும். மானம், அவமா ஞாதி யிதன் விசேஷங்களாகும். இஸ்தூலமோ ரோகங்க ளனைத்திற்கும் ஆஸ்பத(இருப்பிட)மாயிருக்கின்றது.

சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ஜிஹ்வை, கிராணம் இவைகள் சப்தாதி பஞ்சவிஷயங்களை யறிவதால், ஞானே ந்திரியங்களாகும். வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ் தம் இவை வாசஞாதிக்கிரியைகள் செய்வதால் கர்மேந்திரி யங்களாகும. அந்தக் கரணம் ஒன்றே ஸங்கல்பவிகற்பாதி விருத்தி, வஸ்து நிச்சய விருத்தி, அபிமான விருத்தி, பதார்த்தானு சந்தான விருத்தி என்னும் தன் விருத்தி பேதத்தால் கிரமமாய் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என நான்கு பிரகாரமாகும. ஸ்வர்ணம் ஜலம முதலியன விருத்திபேதத்தால் நானுருபமாவது போலப் பிராணன் ஒன்றே தன்விருத்தி பேதத்தால் பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்று ஐந்துவித மாயிருக் கும். ஆகாசாதி பூதபஞ்சகம், சுரோத்திராதி ஞானேந் திரிய பஞ்சகம, வாக்காதி கர்மேந்திரிய பஞ்சகம், மனுதி அந்தக்கரண சதுஷ்டயம், அவித்தை, காமம், கர்மம் இவ் வெட்டையும புரியஷ்டகம் என்றும் சூக்ஷும தேக மென் றும் கூறுவர் அபஞ்சீகிருதபஞ்ச சூக்ஷும பூதங்களாலான தாய், வாசனையோடுங்கூடிக் கர்ம பலமான போகங்களை ஆத்மா அனுபவித்தற்கு சாதனமாயிருக்கும இந்தலிங்க தேகமானது, அஞ்ஞானத்தாலுண்டான அநாதியுபாதி யாயிருக்கிறது. இதன் அவஸ்தை ஸ்வபனமாம்இவ்வவஸ் தையில்மனமானது நானுவித ஜாக்கிரத் வாசனையால்தான் கர்த்திரு முதலிய பாவங்களை யடைந்து விளங்கும. அப்பொழுது ஸ்வயமே பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்மா, மன மாத்திரத்தை யுபாதியாயடைந்து அதனல் செய்யப்படும் கர்மங்களில் பற்றின்றி அவைகட்கெல்லாம சாக்ஷிமாத்திரமாயிருக்கும வாக்கி முதலியன தச்சனது

தொழிலுக்குக் கரணமாதல் போல, ஞான ரூப ஆத்மாவின் ஸர்வ வியாபாரங்கட்கு மிக்க நெருங்கத் தேகம் கரணமாயிருக்கிறது. அக்கரணமும் ஆத்மஸந்நிதியாதாரத்தாலேயே ஸர்வ காமங்களும் செய்வதால் அவ்வாத்மா எப்போதும் விகாரமின்றி யசாசமாகவே யிருக்கும். சக்ஷுவின் குண தோஷவசத்தாலுண்டாகும் அந்த, மாந்த, படுத்துவங்கள் (குருடு, பாதித்திருஷ்டி, நல்லதிருஷ்டி), அகானமே பதிர, மூகத்வங்கள் (செவிட்டு, ஊமைத்தன்மைகள்) முதலியன நேத்ர ச்ரோத்ராதி இந்திரிய தர்மங்களேயன்றி சுத்தமாயுள்ள ஆத்மாவின் தர்மங்களாகா. உச்வாச, நிச்வாசங்கள் (மேல் கீழ் போக்குவரத்தாயுள்ள ச்வாசம்), கொட்டாவி, தும்மலாதி பிராணிகளின் தர்மங்களாகும். பசி, தாகம், பிராணன் ஒன்றன் தர்மமாகும். அந்தக்கரணமொன்றே சிதாபாஸப் பிரகாசத்தோடு சக்ஷுராதி இந்திரியங்களில் பொருந்தியிடமாக நான் என்றபிமானிக்கும் அதுவே அகங்காரமாம். அவ்வகங்காரமே கர்த்தா, போக்தா அபிமானியாய் ஸத்வாதி முக்குணவசத்தால் வரும் அவஸ்தாத்திரயத்தையு மனுபவித்து, அனுகூலவிஷயங்களில் சுகத்தையும், பிரதிகூல விஷயங்களில் துக்கத்தையு மடையாநிற்கும். அதனால் சுகதுக்கங்கள் அகங்கார தர்மமன்றி ஸதானந்த ஆத்மாவின் தன்று. விஷயங்களனைத்தும் ஆத்மாவின் பொருட்டுப் பிரியமாயத் தோன்றுவதல்லாமல் ஸ்வயமே யுள்ளவாறு பிரியமாகா. உண்மையில் ஆத்மாவே யாவற்கும் அத்தியந்த பிரியமாயிருப்பதால் அவ்வாத்மா ஸதானந்த ஸ்வரூபமாம். அதற்கு துக்கம் ஒருசிறிது மில்லை. இந்திரிய விஷய ஆத்மானந்தம் ஸுஷுப்தியில் அனைவர்க்கு மனுபவம். இதில், ச்ருதி, பிரத்தியக்ஷம், ஐதிகம், அனுமானம் இவை பிரமாணங்களாம்.

அவ்வியக்தம், அவித்யை, மாயை முதலிய நாமங்களுற்றதாய், திரிகுணாத்மிகை (முக்குண ரூபி) யாய், புத்திமான்களால் தன் கார்யங்கொண் டனுமானிக்கப்பட்ட

தாய், ஸர்வ திருசியங்கட்கும் மேலானதாய், ஜகமெல்லா முண்டாக்குவதாய், ஸத்து, அசத்து, சதசத்து, பின்னம், அபின்னம், பின்னாபின்னம், சாவயவம், நிரவயவம், சாவயவ நிரவயவம் என்னும் நவபிரகாரமு மல்லாமல் அநிர்வசனீய (இன்னதென் றுணரக்கூடாத) சொரூபமாய், அநாதியாய், ரஜ்ஜு ஞானத்தால் ஸர்ப்பப் பிராந்தி நசிப்பதுபோல சுத்தாத்வைத பிரஹ்ம ஞானத்தால் நசிப்பதாய், மகா அற்புதமாயுள்ள ஓர் பரமேசுவர (பிரஹ்ம) சக்தியுள்ளது. யாவரு மறிவதாயுள்ள தங் காரியத்தால் பிரஸித்தமான அச்சக்தியின் (1) சத்வம், (2) ரஜஸ். (3) தமஸ் என்னும் திரிகுணங்களில், (2) ரஜோகுண சக்தியானது விக்ஷேப சக்தியெனப்பட்டு சர்வப் பிரவிர்த்திகட்கு மேதுவா யிருக்கும். இதனாலேயே ராகாதி, துக்காதிகளான மற்ற விகாரங்களெல்லா முண்டாகின்றன. காமம், குரோதம், லோபம், டம்பம் அசூயை, அகங்காரம், ஈர்ஷை, மச்சரம் முதலான மன விகாரங்களிதன் தர்மங்களாம். இவ்விக்ஷேப சக்தி புருஷர்க்குப் பிரவிர்த்தி யுண்டாக்குந் தோஷத்தால் பந்தஹேதுவா யிருக்கிறது. (3) தமோகுண சக்தியானது ஆவரண சக்தி யென்னப்படும். இதனாலேயே வஸ்து அந்நியதாவா (வேறா)ய் விளங்குகின்றது. விக்ஷேப சக்தியைப் பொருந்தின காரணத்தால் இதுவே, புருஷனது சம்சாரத்திற்-காதி காரணமாம். இவ்வாவரண சக்தியா லாவிருதனான (மூடப்பட்ட)வன். பிராக்ஞனாயினும், பண்டிதனாயினும், சதுரனாயினும் சூக்ஷ்மார்த்த மறிந்தவனாயினும், ஸர்வவல்லபனாயினும், குரு முதலானோர் ஆத்ம தத்துவத்தை நன்றாய் வெகு விதமாய் போதித்தாலும் அம்மறைப்பாலதனை யறியாதவனாய், அக்ஞானப் பிராந்தியா லாரோபிதமான வஸ்துக்களை நல்லதா யெண்ணி -, வற்றையே யடைகின்றான். மகா சாமர்த்திய முள்ளதாய், எவராலும் நீக்கற் கரியதா யிருக்கும் இத்தமோ

குண ஆவரண சக்தியுடன் கூடியவனை, அபாவனை (ஏது மறியாமை), அசம்பாவனை (சொல்லினு மறியாதிருத்தல்), சம்சயபாவனை (சந்தேகம்), விபரீத பாவனை (மாறுகவறி தல்) என்னு மிவை விட்டு நீங்குகிறதில்லை. அவனை விக்ஷேப சக்தியு மெப்போது மிழுத்தலைத் துவைக்கின் றது. அஞ்ஞானம், ஆலஸ்யம், ஜடத்துவம், நித்திரை, பிரமாதம் (செய்வன தவிர்தல்), மூடத்துவம், இவை தமோகுண விகாரங்களாம். இவற்றை யடைந்தவன் ஒன்றுங் கிஞ்சித்து மறியாதவனாய், நித்திரை புரிபவன் போலும், ஸ்தம்பம்போலும் மூடமா யிருக்கிறான். இனி (1) சத்துவ குணமானது ஜலம்போ லதிக பரிசுத்த மாயி னும் ரஜ, தமோகுணங்களைச் சேர்ந்ததால், 1. மலினமாகி பந்த ஹேதுவாம். ஆத்மா, இதில் பிரதி பிம்பித்து ஜகமனைத்தும் சூரியன்போலப் பிரகாசிப்பிக்கும். அமா னித்வ (மானமின்மை) முதலியன, யம, நியமாதி, சிரத் தை, பக்தி, முமுக்ஷுத்வம், தெய்வ சம்பத்தி, அசத்துக் களினீக்கம், இவை புருஷ யத்தனத்தால் பூர்வம்போல் ரஜ, தம மதிகமின்றிய, 2. மிசிர சத்துவத்தின் தர்மங்க ளாம். 3. விசுத்த சத்துவத்தி னிருந்த தெளிவினால், ஸ்வாத்மானுபூதி, பரம சாந்தி, நித்ய திருப்தி, அதிக சந்தோஷம், சதா ஆனந்தமடைதற் கேதுவான பிரஹ்ம நிஷ்டை யிவை ஸித்தியாகும். திரிகுணங்களோடுங் கூடின இந்த அவ்வியக்த சக்தியே ஆத்மாவின் காரண தேகமாம். சர்வ இந்திரிய, மன விருத்திகள் லீனமான சுழுப்தியே இத னவஸ்தையாம். இவ்வவஸ்தையில் 'ஒன் றுமறியாது சுகமாய்த் தூங்கினேன்' என்னும் உலகானு பவத்தால் எல்லாவித ஞானமுஞ் சாந்தமாகி, மனம் கார ணாத்மகமா யிருந்தே பிரஹ்மானந்தத்தை யனுபவிக்கின் றது. தேகம், இந்திரியம், மனம், அகங்கார மாதி விகார மனைத்தும், விஷய, சுகாதிகளும், ஆகாசாதி பூதங்களும், மறும் அவ்யக்த பரியந்த ஜகமனைத்துமான இதுவேற்

அனாத்மாவாம். மாயை, அதன் காரியமான மஹத் தத்துவம முதல் தேகம் முடிவாகவுள்ள இவ்வநாத்மா, கானல் ஜலம்போல அசத்தாகும் என நீ யறிவாயாக.

சிஷ்யனே! எதனை யறிந்து புருஷன் சம்சார பந்தத்தினின்று விடுபட்டுக் கைவல்யத்தை யடைகின்றனனோ? அந்தப் பரம ஆத்ம சொரூபத்தை யினி யுனக்குச் சொல்லுகிறேன். 'அஹம், அஹம்' (நான், நான்) என்று சுயமாய்த் தோற்று மனுபவத்தால் லக்ஷிதமான (குறிக்கப்பட்ட) அந்த சொரூபமாய், அவஸ்தாத்திரய சாக்ஷியாய், பஞ்ச கோச விலக்ஷணமாய், ஜாக்கிர, சொப்பனங்களில் மனவிருத்தியின் பாவத்தையும், சுழுப்தியில் அதன் அபாவத்தையும், அறிவதாயுள்ள அஹம் பதார்த்த ('நான்' எனும் சொற்பொருள்) சொரூபியே ஆத்மாவாம். எது ஸர்வத்தையும் சுயமே பார்க்கின்றதோ? அச்சர்வமும் எதனைச் சிறிதும் பார்க்கிறதில்லையோ? எது புத்தியாதிகளைப் பிரகாசிக்கச் செய்கிறதோ? எதனை யவை பிரகாசிக்கச் செய்கிறதில்லையோ? எதனால் இஜ்ஜகமானது வியாபிக்கப்பட்டிருக்கிறதோ? எதனை யிஜ்ஜகம் சிறிதும் வியாபிக்க வில்லையோ? யாதொன்றன் பிரகாசத்தால் ஜடமான இச்சகலமும் விளங்குகின்றனவோ? எதன் ஸந்நிதிமாத்திரத்தால் தேக, இந்திரிய, மன, புத்திகள் பிரேரேபிக்க (ஏவ)ப்பட்டவைபோலத் தத்தம் காரியங்களில் பிரவேசிக்கின்றனவோ? நித்திய ஞான சொரூபமான எதனால் அகங்காராதி தேகாந்தமா யுள்ளவையும், விஷயங்களும், சுகாதிகளும் கடத்தைப்போலத் திருசியமாயறியப்படுகின்றனவோ? எதனால் உயிரும், வாக்கும், மற்றவையும் சரிக்(அசை)கின்றனவோ? அந்த அந்தராத்மா புராண புருஷனாய், நிரந்தரமாய், அகண்ட, பரிபூர்ணமாய், ஆனந்த சொரூபமாய், ஏகமாய், ஸத்ரூபமாய், பிரதி தேகத்திலும் சாக்ஷி (ஞான) மாத்திரமாயிருக்கிறது. இத்தேகத்தின்கண், ஹிருதய குகையில

அவ்வியாகிருத (சூக்ஷ்ம, வியாபகத்வத்தால் வெளிப்பட்டுத் தோற்றுத) ஆகாசத்தைப் போலப் பிரகாசிக்கின்ற பரிசுத்த ஆத்மாவானது ஆகாசத்தில் சூரியனைப்போலத் தன் தேஜஸால் இவ்வுலகைப் பிரகாசிப்பிக்கின்றது. மன, அகங்காரங்களின் விகாரங்களையும், தேக, இந்திரியப் பிராணாதிகளின் செயல்களையு மறிவதாய், தப்தா யப்பிண்டத்தில் அக்கினிபோ லவைகளில் அனுஸ்யூதமா யிருப்பினும் இது ஒன்றைச் செய்கிறது மில்லை, ஒரு விகார மடைகிறது மில்லை. இவ்வாத்மா ஜநியாது, மரியாது, பெருக்காது, இளைக்காது. வேறு விகாரங்களு முறாது. கடம் நசிக்கினும் நசியாத கடாகாசம்போல இத்தேகம் மரிக்கினும் மரண முறாத நித்திய ஸ்வரூபமாம். பிரகிருதி (காரண மாயை), விகிருதி (அதன் காரியங்)கட்கு விலக்ஷணமாய், சுத்த ஞான சொரூபமாய், சத்து, அசத்துக்களைப் பிரகாசிப்பித்து நிர்விசேஷமாய், ஜாக்கிராதி அவஸ்தைகளில் புத்திக்கு சாக்ஷியாய் இருந்து 'அஹம், அஹம்' எனவே நித்யாபரோக்ஷமாய்ப் பிரகாசிக்கு மப் பரமாத்மாவை ஏகாக்கிரசித்தத்தால் 'இந்த நான் பிரஹ்மம்' என்று அனுபவமா யறி. இங்ஙனம் புத்திப் பிரஸாதத்தால் உன்னாத்மாவை யுன்னிலேயே நீ யுணர்ந்த வதனால் ஜனன மரணத் தரங்கங்களுள்ள அபாரசம்சார சாகரத்தைக் கடந்து கிருதார்த்தனாய்ப் பிரஹ்மசொரூப மாத்திரமா யிருக்கக்கடவாய்.

அனாத்மாவில் (தானல்லாத் தேகாதிகளில்) அஹம் (நான் எனும்) புத்தியே சர்வானர்த்த ஹேதுவான பந்தமாம். இப்பந்தமானது புருஷனுக்கு ஜனன மரணங் கொடுக்குங் காரணமாய் அஞ்ஞானத்தால் வந்ததாம். இந்த அஞ்ஞானத்தால் அசத்தியமான இத்தேகாதிகளை சத்தியமாயெண்ணி யிதிலாத்ம புத்தி செய்து கோசகாரப்புழு (பட்டுப்பூச்சி) வாய்நூலால் தன்னைக்காத்துநசிப்பதுபோல சப்தாதி விஷயங்களா லிதனைப் போஷித்து

நாசமுறுகின்றனர். ஆவரணத்தால் மூடப் பட்டவர்க்கெல்லாம் விவேகமின்மையின், ஸர்ப்பத்தில் ரஜ்ஜுபுத்தி போல வஸ்து வல்லாததில் வஸ்து எனும் புத்தி தோற்றல் சுபாவமாதலால், அகண்டமாய், நித்தியமாய், அத்வைதமாய், தன் நிர்மலஞான தேஜஸால் சுயம் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அனந்த வைபவமுள்ள ஆத்மாவை சூரியனை ராகு மறைத்தல் போலவே தமோமயமான இவ்வாவரணசக்தி மறைக்கவும், புருஷனானவன் தன் சொரூப ஞானத்தை மறந்து, மோகமாகிற முதலையால் விழுங்கப்பட்டவனாய்,அம்மோகத்தால் தானல்லாத சரீரத்தைத்தானாக எண்ணிக் காமக் குரோதாதிகளுடன்கூடி புத்தி கெட்டுஅப்புத்தியி னவஸ்தைகளனைத்தையும் தன்னதாக அபிமானித்து அதனால் விஷய விஷம் நிரம்பிய அபார சம்சார சமுத்திரத்தில் அமிழ்ந்தும் எழுந்தும் ஓர்கதியின்றி பிரமிக்கும் படியாக ரஜோகுண விக்ஷேப சக்தியானது மகத்தான துன்பஞ் செய்துவைக்கின்றது. சூரியனது கிரணத்தாலுண்டான மேகபங்திகள் அச்சூரியனை மறைத்துப்படர்ந்து விருத்தியாதல் போல, ஆத்மாவில் அஞ்ஞானத்தா லுண்டான அகங்கார பந்தமும் அவ்வாத்மாவை மறைத்துத்தானும் விருத்தியாகின்றது. மழைக்காலத்தில் மேகங்களால் சூரியன் மறைபட்டதினத்தில் பனியும், குளிர்காற்று மதிகமாய் ஜனங்கட்குத் துக்கந்தருவதுபோல, தமோகுண ஆவரணசக்தி ஆத்மாவை மறைக்கும்போது, ரஜோகுண விக்ஷேபசக்தியானது அவ்வஞ்ஞானியை மோகத்தால்தானல்லாத தேகத்தைத் தானாக மயங்கச்செய்து நானாவித துக்கங்களால் மிகவுந் துன்புறச் செய்வதால் இவ்விரண்டு சக்திகளாலுமே புருஷனுக்குப் பந்தம் வந்தடைந்ததாகும். இச்சம்சாரவிருக்ஷத்திற்குத் தமஸே (ஆவரணமே) பீஜம்; தேகாத்மபுத்தியே, அங்குரம்; ராகமே, தளிர்; கர்மமே,ஜலம்; தேகமே, அடிக்கட்டை; உயிர்களே, சாகைகள்; இந்திரியங்களே

யவற்றின் நுனிகள்; விஷயங்களே, புஷ்பங்கள்; நானுகர்மத்தாலுண்டான நானாவித துக்கமே, பழம்; அம்மரத்தினுள்ள ஜீவனே இதனை பக்ஷிக்கும் பக்ஷியுமாகும். அஞ்ஞானத்தாலுண்டாய் ஜீவர்க்கு ஜன்ம, மரண, ஜரா துக்காதிகளை மேன்மேலுண்டாக்குவதாயுள்ள இந்த அனுத்ய சம்சார பந்தமானது, உற்பத்தியின்றிய அனுதியே ஆயினும், சுருதியைப் பிரமாணமென நம்பி, அதனுற் கூறப்படும் ஸ்வதர்மங்களை நிஷ்காமமா யனுஷ்டிக்குமதனால் உண்டாகு மந்தக்கரண சுத்தியோடு நிரந்தரம் செய்யும் தியானத்தால் மாலின்யமின்றித் தீட்டப்பட்ட ஆத்மபரோக்ஷஞான மென்னும் வாளினுல் சமூலமாய் நாசத்தை யடையும். அதன்றி மற்ற அஸ்திர, சஸ்திரங்களாலும், வாயு, அக்கினிகளாலும் அதனை சேதிக்க சக்கியமாகாது.

ஆதலால், தன்னஞ்ஞான சக்தியின் காரியமான அன்னமயாதி பஞ்ச கோசங்களால் மூடப்பட்டு, பாசிப் படலத்தால் மூடப்பட்ட வாவிஜலம்போல சுத்தமாயத் தோற்றவில்லை. ஜலத்தினின்று அப்பாசிக் கொத்தினை நீக்கினால் தன்னும்போது பரிசுத்தமாய், தாக, தாபங்களை நீக்கிப் புருஷனுக்குப் பரம சௌக்கிய முண்டாக்கும் அந்த ஜலம்போல, சூக்ஷ்ம புத்தியால் ஆத்மாவினின்றும் கிருஷியாய் பஞ்ச கோசங்களை நேதி, நேதி (இதல்ல) எனவே பிரித்ததனாலும் அப்பவாதத்தால் ஆகாய பலவின் மதியில் இஷீகை (தண்டு) போல அந்தத கோகாதி கிரியைகளுக்கட்கு விலக்ஷணமாய், பிரத்தியக்கா (அந்தரமா)ய், பரிசுத்தமாய், ஏகரஸமாய அசங்கமாய், அக்கிரியமாய், சதானந்த சொரூபமாய், சுயம் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவை யறிந்து, பின் ரஜ்ஜுவில் கற்பித சர்ப்பம ரஜ்ஜுவே யாதல்போல ஆத்மாவில் கற்பிதமான அத்திரிசிய வர்க்கங்களும ஆத்மாவே யெனப் பிரவிலா

பிதது ஆத்மா மாத்திரமாய் எவனிருக்கின்றனோ? அவ
னே முக்தனும். ஆதலால் விவேகி, தன் பந்த மோக்ஷத்
தின் பொருட்டு ஆத்மானாத்ம விவேசனமே செய்யவேண்
டும், அதனால் சச்சிதானந்த சொரூபமான தன்னை
யறிந்து ஆனந்த மடைகின்றனன். அன்னமயம், பிரா
ணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்
னும பஞ்ச கோசங்களுள் :—

அன்னத்தா லுண்டாய், அன்ன முண்பதால் விருத்தி
யாய், அன்னமின்றேல் நாசமுறும் இந்த ஸ்தூல தேகமே
அன்னமய கோசம். தோல், ரக்தம், மாமிசம், மேதஸ்,
அஸ்தி, மலம், மூத்திரம் இவைகள் கூடி மிகவும் அசங்
கியமாய், முன்னும் பின்னுமின்றி மத்தியத்தில் மாத்திரந்
தோன்றி, க்ஷணத்துக்கு க்ஷணம் விகாரமுற்று, ஓர் நிய
மமு மில்லாமல் கடம்போல திருசியமாய், ஜடமாய், நானு
வாய், கியம்யமாய் (ஏவப்பட்டதாய்) இருக்கும் தேகமா
னது, சுபாவத்திலேயே இதற்கு விலக்ஷணமாய், ஏகமாய்,
அங்கங்கள் (பாணி, பாதாதி) நசிக்கினும் அவ்வசகதி
கள் நாசமாகாது ஜீவித்திருப்பது போல அஸ்த, பாதாதி
அவயவாகாரமான சரீரம் நசிக்கினும நாசமுறாத நித்திய
மாய், பரிசுத்தமாய், தேகம், ஷட்பாவ விகாரங்களான
அந்ன தர்மம், கர்மம, அவஸ்தை யிவற்றை சாக்ஷி மாத்
ரமாயிருந்து சுய மறிந்துங்கொண்டு நியாமகமா (ஏவுகிற
தா) யிருக்கும் ஆத்மா வாதல் எங்ஙனம்? ஒருபோது
மாத்மாவாகமாட்டாது. ஜடனாயுள்ள மூடனே துவக்கு,
மாமச, அஸ்தி, மல, மூத்திர மாகியான தேகமே அக
மென நினைப்பன். சிறிது விவேகமுள்ள கர்மஞானி,
தேகம், ஜீவன் இரண்டையுங் கூட்டி நான் என் றெண்ணு
வன். விசார சீலனாய், திருடமான விவேக ஞானமுள்ள
மகாத்மாவோ? இததேக விலக்ஷணமாய்த் தன் மயமா
கவே யிருக்கும் பரமார்த்த பிரஹ்ம சொரூபமாகவே

தன்னை யெப்போது மறிவான். தேகாத்ம புத்தியே மனுஷ்யர்க்கு ஜன்மாதி துக்கபீஜ மாதலால், உன் சாயா சரீரம், பிரதி பிம்ப தேகம், மனோராஜ்ய வுடல், சொப்பன வுடம்பு இவைகளில் ஆத்ம புத்தி வைக்காததுபோல தோல், மாமிச, எலும்பாதி விகாரமான இஸ்தூல தேகத்திலும் ஆத்ம புத்தி சிறிதும் வையாது பிரயத்நத்தால் அதனை நீக்கி, சர்வாத்மக, சச்சிதானந்தகன, நிர்விகற்பப் பிரஹ்மத்தில் ஆத்ம புத்தி வைத்ததால் மனதை நாசஞ் செய்து, பரம சாந்தி பெறுவாயாக. பின்னை யுனக்குப் பவமே யில்லை. வேதாந்தார்த்தங்களை நன்று யறிந்த வித்வானாயினும் பிரமையினால் அசத்தான தேகாதிகளில் அகம் புத்தியை எதுவரை விடமாட்டானோ? அது பரியந்த மவனுக்கு மோக்ஷம் என்னும் வார்த்தையுங் கூடியில்லை.

கர்மேந்திரியங்களோடுடன் பிராணன் சேர்ந்து பிராணமய கோசமாம். முற்கூறிய அன்னமய கோசமானது இப்பிராணமயத்தால் பூர்ணமாய் (நிரம்பி)த் தன்கிரியைகளில் பிரவிர்த்திக்கின்றது. வாயுவின் விகாரமாய் அதனைப்போலவே யுள் வெளியில் போக்குவரத்துள்ளதாய், இஷ்டம், அநிஷ்டம், அந்நியம், தனது என்றொன்றுங் கிஞ்சித்து மறியாது பரதந்திரமாயிருத்தலின் இப்பிராணமய கோசமும் ஆத்மா வாகமாட்டாது.

ஞானேந்திரியங்களோடுடன் கூடின மனமே மனோமயகோசமாகும். இது, என்னது, யான் என்று வஸ்து விகற்ப காரணமாய், நாமருத்திபேதங்களோடுங் கூடி மகா பலமுள்ளதாய் முற்கூறிய பிராணமய கோசத்தால் பூரிக்கப்பட்டு அதனை முற்றும் பரவியிருக்கும். பஞ்சேந்திரியங்களென்னும் பஞ்சஹோதாக் (ஹோமம் செய்வோர்)களாலே, சப்தாதிவிஷயங்களாகிற நெய்யினாலும், வாசனைகளாகிற சமித்துக்களினாலும் வளர்க்கப்பட்டுமிக

வும் ஜ்வலிக்கின்ற மனோமய அக்கினியானது இகபர பிர
பஞ்சமெல்லாற்றை தஹிக்கின்றது (தாபமுண்டாக்குகி
றது). மனத்தையன்றிவேறு அவித்தையில்லை அதுவே
பவபந்த ஏதுவான அவித்தையாம் அம்மனம் பெருத்த
தால் அனைத்தும் விருத்தியாய், அது நசிக்கிலனைத்தும்
நாசமுறுகின்றது முன் யாதொரு வஸ்துக்களுமின்றிய
ஸ்வப்னாவஸ்தையில் மனமே தன் சாமர்த்தியத்தாலேபோக
தா முதலாய்த் தோற்றப்பட்ட ஸ்வப்ன ஜகமனைத்தையும்
எங்ஙனமுண்டாக்குகின்றதோ அங்ஙனமே இந்த ஜாக்கி
ரத்திலும் மனதாலுண்டாய்க் காணப்பட்ட இவையா
வும் அம்மனோவிலாசமேயாம் சுழுப்தியில் மனம் லீனமா
குங்கால் ஒன்றுந் தோற்றாதது யாவர்க்கு மனுபவமா
மாதலால், புருஷனுக்குச் சம்சார பந்தமானது மனக்கல
பிதமேயன்றி யுண்மையில் பவபந்தமேயில்லை வாயுதானே
ஆகாசத்தில் மேகங்களைச் சேர்த்துப்பின் விலக்கிவிடுதல்
போலும், மனுஷ்யன் கயிற்றால் பசுவைக்கட்டிப் பின்
னவிழ்த்து விடுதல்போலும், மனந்தானே முக்குணங்களில்
ரஜ, தமகுணங்களைச் சேர்த்தால் மலினமாகி, தேகாதி
ஸ்தூல விஷயங்களிலும் புருஷனுக்கு ராகமு (ஆசையு) ண
டாக்கி, பந்தத்தையும், ரஜ, தமமின்றிச் சுத்தஸத்வத்தை
யனுசரித்ததால் வந்த அவ்விஷயங்களை விஷம்போலகற
றும் விராகத்தாலும், விவேகத்தாலும் நிர்மலமாய
மோக்ஷத்தையுந் தருங் காரணமாயிருத்தலால் புத்திமா
னான முமுக்ஷு அவ்விவேக வைராக்கிய மிரண்டையும்
முன்னம் திடமாயடையவேண்டும். மனம் என்னும் நாம
முள்ள மகா வியாக்ரமொன்று (ஓநாய்), விஷயமாகின்ற
மகாரண்யப் பிரதேசத்தில் எப்போதும் சஞ்சரிக்கின்ற
தால் சாதுக்களாயுள்ள முமுக்ஷுக்கள் அம்மார்க்கமாய்ப்
போகவே வேண்டாம் ஜீவனுக்கு ஸ்தூல, சூக்ஷ்ம விஷ
யங்களனைத்தையும், சரீர, வர்ண ஆசிரம, ஜாதிபேதங்
களையும், குணம், கிரியை, ஏது, பலன் இவைகளையும்
மனமே யெப்போதுந் தோற்றுவிக்கின்றது இவ்வாறப

மனமானது அசங்கசித்ரூப வஸ்துவை மோகிப்பித்து தேக, இந்திரியப் பிராண குணங்களால் பந்திப்பித்து, தன்னாற்செய்யப்பட்ட கர்மபல போகத்தில் நான், எனது எனவே சர்வதா பிரமிக்கச் செய்கிறது. அத்தியாச தோஷத்தால் மனமே புருஷனுக் கிப்பொய்யான சம்சார பந்தத்தைக் கற்பிக்கின்றது. ராஜஸ, தாமஸகுண தோஷங்களுடன் கூடின அவிவேகிகட் கிதுவே ஜனனமாதி துக்கங்கொடுக்கும் மூலகாரணமாம். வாயுவால் மேக மண்டலம் சுழலுவது போல மனதால் இந்த ஜகமனைத்தும் பிரமைகொண்டு சுற்றுகின்றதல்லவா! இதனாலேயே தத்துவவித்துக்களான பண்டிதர்கள் மனத்தையே அவித்தையென்பார். ஆகையால் முமுக்ஷுவானவன் தன் பிரயத்தனத்தால் இம்மனதைச் சோதிக்கவேண்டும். இது சோதனை செய்யப்பட்டு சுத்தமாகும்போது மோக்ஷமானது கரதலக்கனி போலாம். மோக்ஷ மாத்திரத்திலுள்ள ஆசையால் இதர விஷயாசையை நிர்மூலமாக்கி சர்வகருமங்களையுந் துறந்து சிரத்தையோடு நிரந்தரம் சிரவணாதி நிஷ்டனாயுள்ளவனின் மனத்தின் சஞ்சல சுபாவத்தை நிவிருத்திப்பன். ஆதியந்தமுள்ளதாய், பரிணாமியாய், துக்காத்மகமாய், திருசிய விஷயமாயிருத்தலின இம்மனோமயகோசமும் திருஷ்டாவாய், பரமமாயுள்ள ஆத்மாவாகாது.

பஞ்ச ஞானேந்திரியங்களுடன் கூடின புத்தியானது விஞ்ஞானமயகோசமாகும். இதுபுருஷனுக்கு சம்சாரகாரணமாய் பிரகிருதி விகாரமாய் அனாதியாய், சித்பிரதிபிம்பத்தைச் சார்ந்து சகல விவகாரங்களையும் நிர்வகிக்கும் அகங்காரசுபாவனை ஜீவரூபமாய், விருத்தியோடு கூடிய கர்த்தாவாய், ஞானக்கிரியைகளுள்ளதாய், சர்வதா தேகேந்திரியாதிகளை நானென்றும், அவற்றின் ஆசிரம, தர்ம, கர்ம, குணங்களை என்னதென்றும் மிகவும் அபிமானித்துப் பூர்வவாசனைக்குத் தக்கபடி புண்ணிய பாபகர்மங்களைச் செய்து, அக்கர்மானுசாரமாய் ஊர்த்துவ, அதோலோ

கங்களிற் போவதும் வருவதுமாயலைந்து திரிந்து, நானு விசித்திரயோனிகளிற்கூடி, ஜாக்ர, ஸ்வப்னாதி யவஸ்தைகளுற்று, சுக, துக்கங்களாகிற அக்கர்ம பல போகங்களை புஜிக்கின்றது. இவ்விக்ஞான மயாதி கோசங்கட்குள் ஹிருதயத்தில் கூடஸ்தனுய், சுயஞ்ஜோதியாய் ஸ்புரித்து (விளங்கி)க் கொண்டிருக்கும் ஆத்மா, சுபாவமாகவே ஏக, சத்திய, சர்வாத்மக, பரிபூர்ண, நிர்விகார பரமாத்மாவா யிருந்தும், தன் சந்நிதான சாமீப்ய விசேஷத்தால் மிகவும் பிரகாசித்து நெருங்கின உபாதியா யிருக்கும் இவ் விக்ஞான மயகோச புத்தியின் அத்தியாசதாதாத்மியத்தால் (பொய்க்கூட் டுறவால்) மித்யா பரிச்சேதமடைந்து 'அக்கோசமே நான்' என்று மண்ணின் வேருகக் குடத்தைக் காண்பதுபோலத் தன்னைத் தனக்கன்யமாகவும், கர்த்தா, போக்தா வாதியாக அயவிகார முற்ற நிர் விகார அக்கினிபோல அவ்வுபாதியின் தர்மங்களைத் தானடைந்ததாகவும் மதித்து பிரமையினுல் சமசாரத்தை யடைகின்றது." என்றுரைத்த குருவை நோக்கி, "குருமூர்த்தீ! பரமாத்மாவுக்குப பிராந்தியாலேனும், மற்ற எதனுலேனும், அனுதி ஜீவ பாவம தோன்றிற்றெனின்? அவ்வனுதியுபாதிக்கு அந்தமு மில்லையாகுமே. இன்றெனின்? ஜீவ பாவமும் நித்தியமாய், சம்சார பந்தமும் நீங்காதே? அங்ஙனமாயி னிதன் மோக்ஷமுற லெங்ஙனம்? இதனை யருள் செய்ய வேண்டும்." எனக்கேட்ட சிஷ்யனைப் பார்த்து, "வித்வானுன சிஷ்யா! நன்ருய்க் கேட்டனை. யான் கூறு முத்தரத்தை சாவதானமாய்க் கேள். பிராந்தி மோகத்தால் கல்பிதமான வஸ்துக்களை யெல்லாம் பிரமாணத்தால் நன்ருக விசாரிக்குங்கால், ரஜ்ஜுவில் பிராந்தி காலத்தில் தோன்றி, யப்பிராந்தி நாசத்தில் நாசமுறும் சர்ப்பாதிகள்போல, பிராந்தியுள்ளவரை தோற்று மவை, யப்பிராந்தி நீங்கவே யதார்த்த வஸ்து வாகாது அசத்தாய் நசித்தலால், அசங்க, நிஷ்கிரிய, நிர்க்குண, நிர்விகார, நிராகார, சச்சிதானந்த, பிரத்தியக், ஸாக்ஷி சொரூப

மாய், ஆகாசத்தில் நீலாதிபோலப் பிரமையாலன்றியொரு வஸ்து சம்பந்தமு முறாத ஆத்மாவுக்குப் பிராந்தி ஞானத்தால் வந்த புத்தியாகிற அஞானதி மித்யா வுபாதியின் தாதாத்மிய சம்பந்தத்தால் கானல் ஜலம்போற் கற்பிதமான அசத்ய ஜீவ பாவமும், அஞானதியே யாயினும், வஸ்து வாகாமையின், ஆத்மாநாத்ம விவேகத்தால், அழுக்கு ஜலத்தி னழுக்கை நீக்கவே நிர்மலமாய்த் தோன்றும் ஜலம்போல, ஆத்மாவினின்றும அஞானதியவித்யை, அதன் காரியமான அஹங்காராதி யசத்தான உபாதிகளை நிவர்த்தி செய்து நீக்கும்போது நிர்மலமாய் சுயம் பிரகாசிக்கும் சுருதி சம்மதமான பிரஹ்மாத்மைக்கிய சத்திய ஞானத்தா லபிராந்தி நசிக்கவே அஞானதி பிராகபாவம் அந்த முறல்போலும், ஜாக்கிரத்தில் சொப்பனப் பிராந்தி நஷ்டமாதல் போலவும், சமூலமாக (அஞானதிய வித்தையாதியுபாதிகளோடு) நாசத்தை யடையும். ஆத்மானாத்ம விவேகத்தா லுண்டான சத்திய ஞானத்தாலன்றி மற்றவையால் அசத்திய ஜீவ பாவ பந்த மோக்ஷ முண்டாகாததால் நீயும் விவேகித்து அகங்காராதி யசத்துக்களை யகற்றுவாயாக. இந்த விக்ஞான மயகோசமும், விகாரியாய், ஜடமாய், பரிசின்னமாய், திருசியமாய், வியபிசாரியாய் (ஒரு படித்தாயிராததாய்) இருத்தலின் சிரேஷ்டமான ஆத்மாவாக மாட்டாது. அநித்தியம் நித்தியமாகுமா?

பிரஹ்மானந்தப பிரதி பிம்பத்துடன் கூடின அவித்யா விருத்தியே ஆனந்த மயகோசம். ஜாக்ர, ஸ்வப்னங்களி லிஷ்ட முண்டாகும்போது தோன்றிப் பிரியம், மோதம், பிரமோதம் (விஷய தரிசன, லாப அனுபவத்தால் முறையே யுண்டாகும் சந்தோஷம்) என்னும் பேதத்தால் சகல ஜீவர்களாலும் ஸ்வல்பமா யனுபவிக்கப்பட்டு, சுழுப்தியில் பிரயத்தனமின்றியே ஆனந்த மயமா யனுதினம் சுகிப்பதால் விசேஷமா யனுபவிக்கப்படுவதாயுள்ள இவ்வானந்த மயகோசத்தின் பூர்ணானுபவத்தையே

ஸாதுக்களாயுள்ள விவேகிகள் சார்வதா அடைவதாகும். ஸோபாதியாய்,* பிரகிருதி விகாரமாய், புண்ய காரியமாய் விகாரசங்காதங்களி னுட்பட்டதா யிருத்தலின் இவ்வானந்த கோசமும் பரமமாயுள்ள ஆத்மாவாகாது.

இப்பஞ்ச கோசங்களையும் ஆத்மாவன்றென நீக்குங்கால் அவ்வபவாதத்தின் முடிவில், இவற்றின் விலக்ஷணமாய், அவஸ்தாத் திரய சாக்ஷியாய், சுயஞ் ஜோதியாய், நிர்விகார, நிரஞ்ஜன, நித்ய போதானந்த சொரூபமாய், திருசிய கூடமுமாகாது, அதன் தர்மமு முறாது அதனை யறிந்துக்கொண்டிருக்கும் தேவதத்தனைப்போல, திருசிய பஞ்ச கோசங்களு மாகாது, அவற்றின் தர்மமு மடையாது, அவற்றை யறிந்துகொண்டு ஏகமாய் மிஞ்சித் தோன்றும் இவ்வாத்மாவையே 'அஹம்'' என அறிய வேண்டும்.'' என்றுரைத்த குருவைப் பார்த்து சிஷ்யனவன், ''குருவே! இப்பஞ்ச கோசங்களும் சுத்த மித்தை யெனவே யூகத்தால் நேதி செய்து நீக்கிய பின், சுத்த சூன்யத்தை யன்றி 'நான்' என்றொன்றுங் காணேமே. ஆதலால் 'அஹம்' எனறறியத்தக்க ஆத்ம வஸ்து வேறே திருக்கின்றது'' என்று வினவக் குருவானவர், ''வித்வானான சிஷ்யா! நீ விசாரத்தில் ஸமர்த்த னாதலாலுண்மை சொன்னாய். 'எது எதனை 'இது' என அறிகின்றதோ? அது அதற்கு சாக்ஷியாம். அறியாதது சாக்ஷியன்று.' என்னும நியாயத்தால் அஸ்திரமாய், நாஞ ரூப விகாரத்தோடு கூடிய அஹங்காராதி திருசிய வஸ்துக்களின் பாவத்தை (இருப்பை)யும, அவற்றின் அபாவ ரூபமான சூன்யத்தையும, இவற்றின் மேலே ஞான சொரூபமா யிருந்தறிவதால அவற்றின் சாக்ஷியாய், மேலில் தன்னை யறிவதற வொன்றின்றித் தன்னைத் தன் தேஜஸால் தான்றனே யறிவதால் தனக்கும சாக்ஷியாயிருந்து ஜாக்ர, ஸ்வப்ந, சுழுப்திகளில் ஏகமாய், பிரத்தியக் காதமாவாய், ஹிருதயத்தில, 'அஹம, அஹம' என்று ஸதா

தானகவே ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நித்திய ஞானனந்த ஆத்மாவை அதி சூக்ஷ்ம புத்தியால் 'அஹம்' (நான்) என்றறிவாயாக. மூடனானவன் கட ஜலத்தில் தோன்றும் சூரியப் பிரதி பிம்பத்தை சூரிய னென்பன். விவேகி, கடம், ஜலம், பிரதி பிம்பம், இவற்றை விட்டு ஆகாசத்தில் ஏகமாய், தாக்கற்று இம்மூன்றையும் பிரகாசிப்பித்து சுயம் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சூரியனே யுள்ளபடி யறிவான். அதுபோல அக்ஞனுயுள்ள மூடன் பிராந்தியால் தேகத்தின்கண் புத்தி யுபாதியில் தோற்றும் ஆத்மப் பிரதி பிம்பமாகிய ஜீவனையே அஹமென் றெண்ணுவன். விவேக ஞானமுள்ள வித்வானே? தேகம், புத்தி, சிதாபாச மிவற்றைவிட்டு, ஹிருதயா காசத்தில் ஏகமாய், இவையாவு மறிந்துக்கொண்டு நித்தியமாய் சர்வத்திலும் நிறைந்து அச்சர்வத்தையும் பிரகாசிப்பித்து சூக்ஷ்மமாய், வியாபகமாய், ஸத், அஸத்துக்கு விலக்ஷணமாய், உள், வெளியின்றிச் சுயம் பிரகாசித்துக்கொண் டிருக்கும் அகண்ட ஞான ஸ்வரூபமான தன் நிஜரூப் ஆத்மாவை நன்றாய் விசாரித தறிநது, அதனல் நிர்மலனுய், ஜனன, மரணுதிக ளற்று, ஒன்றாலும் பயமின்றி, துக்கரகிதனுய், நிச்சலானந்தகனசொரூபமாகிறுன். ஸத்ய, ஞான, அனந்த, ஆனந்த, ஏகரஸ, நித்ய நிரந்தர, ஸ்வதசித்த, சுத்த, பிரத்தியக்க பின்ன பிரஹ்மத்தை யுள்ளவாறு அகமென அனுபவமா யறிந்த ஞானி மீண்டும் இசசம்சார மடைதலின்றி அவ்வத்வைதானநதப் பிரஹ்மமே யாவதால் 'பிரஹ்மேமாஹம் என்னும் பிரஹ்மாத்மைக்கிய ஞானமே ஸம்ஸார பந்தத்தினின்றும் முக்திபெற முக்கிய காரணமாம். இந்தப் பிரஹ்மாத்ம ஞானத்தையன்றி பவபநத மோக்ஷத்தில் முமுக்ஷுவுக்கு வேறு வழியில்லை யாதலால், நீயும் அஹம் பிரஹ்மம், பிரஹ்மோஹம், பிரஹ்மைவாஹம்' மென் றனேனை யனுபவமா யெபபோது மறிக.

இந்தப் பிரஹ்மமானது, தன்னில் வேறு வஸ்து வின்மையின் பரமாதவைதமாகும். மிருத்காரியமான கும்பத்திற்கு மண்ணுருவத்தையன்றி வேறு ரூபமின்மையின், மண்ணையன்றி யன்யமாய் கடத்தைக் காட்ட எவனும் சமாத்த னாகாமையால், மோகத்தால் கற்பிதமேயாய் நாம மாத்திரமா யிருக்கும் அசத்திய கும்பமும் சத்தியமண் மாத்திரமா யதற் கற்பமும் பின்னமின்றி யிருத்தல் போலவும், அதிஷ்டானத்தில் கற்பிதமா யன்யம் போற் றோற்றும்புாவும், பிராந்தியால் அதிஷ்டானமே யாரோபமெனத் தோன்றலால், ரஜ்ஜு ஸர்ப்பம் போலுண்மையி லின்றி சுத்தப் பொய்யாத் தோற்றுமவை, ஆரோப ரஜதம் தன்னதிஷ்டான சுக்திக் கன்யமின்றி யச்சுக்தியே யாதல்போ லவ்வதிஷ்டானத்திற் கன்யமின்றி யதிஷ்டானமே யாதல் போலவும், பிராந்தனுயுள்ள மூடனுக்கு அக்ஞானப் பிரமையால் நாமரூபமுள்ள இச்சர்வ ஜகமாய் எது வெது திருசியமாய் சத்தியம்போற் றோற்றுகின்றதோ? சாதுவே! யதார்த்த ஞானதசையில் பிரஹ்மகாரியமாய், அவ்வதிஷ்டானப் பிரஹ்மத்தில் கற்பிதமா யன்யமாய் சத்யம்போற் றோற்று மச்சர்வமும், பிராந்தியால் அதிஷ்டானப் பிரஹ்மமே யாரோப ஜகமெனத் தோற்றலால், நாம மாத்ரமாய் அற்பமு மோர் பொருளா யிராது சுத்தபித்தையாய், அவ்வதிஷ்டானப் பிரஹ்மத்திற் கன்யமாகாது உதயாஸ்தமன ரஹித அச்சச்சிதானந்தப் பிரஹ்ம மாத்ரமாகவே யிருக்கின்றது. அன்றியும், பிரஹ்மத்திற் கன்யமாய் ஜகம் சத்தியமா யிருக்கிறதெனின்? பிரஹ்மத்தின் பரிபூர்ணத்துவத்திற் கானியும், 'இப்பிரபஞ்ச மனைத்தும் பிரஹ்மமே' என்றரமாய் அதர்வண சுருதியில் கூறும் வேதத்திற்கு அப்பிரமாணத்வ ஸித்தியும், 'சர்வ பூதங்களு மென்னிலில்லை, ஏகனும்யானு மவற்றிலில்லை' என்றுரைத்த சர்வக்ஞனை ஈசுவரனுக்கு அசத்திய வாதித்வமும் வரும். இம்மூன்று தோஷங்க

ளும் ஸாதுக்களாயுள்ள மகான்களுக்கு சம்மத மாகாது. அதுவுமன்றி சுஷுப்தியிலும ஜகம் சிறிதும் தோன்றாது முற்கூறியபடி விசாரிக்கில் சொப்பன ஜகமபோல வெறும பொய்யாபபோதலின அஞ்ஞானம கூறும மோகமுற்ற அம மூடர் வசனம தூஙகுவோனது பிதற்றலபோல சத்திய மாம். அதனால பிரஹமமே எஙகும ஏகமாய்ப் பிரகாசிக கின்றது. அத்விதியமாய், அரூப, அக்கிரிய, அவ்யக்த, அவ்வியய, அப்பிரமேய, ஆதியந்தரஹித, சத்திய, சாந்த, பரிசுத்த, ஆனந்தரஸ சொரூபமாய், மாயையால செய் யப்பட்ட சாவ பேதஙகளுமின்றி நித்ய, நிரந்தர, நிஷ் கள, நிரஞசன, நிர்நாம, நிர்விகல்ப. ஸ்வயஞ ஜோதியாய், ஞாதிரு, ஞானஞேய மென்னுந திரிபுடி சூன்ய, கேவல, அகண்ட சின்மாத்ரமாய சதா பிரகாசிககு மிந்த பரப பிரஹ்ம தத்துவத்தை ஞானிக ளறிகின்றார்கள்.

சிஷ்யனே! பற்றவும, விடவுங கூடாததாய், மன, வாக்குகட கேகோசரமாய, அப்பிரமேயமாய், ஆதி யந்த மற்ற அபரிபூரணப பிரஹமமே, நாமும, நீயும, மற்ற ஜீவர்களுமாம. இவவாறு சோதிககபபட்டுத, 'தத் 'துவம' பதஙகளா லறியப்பட்ட பிரஹம ஜீவாகது, 'தத் துவமஸி' மகா வாககியமும, இன்னு மனேக மகா வாக் கியஙகளும, முறையே ஈசுவரனது மாயையாதியும, ஜீவ னது பஞச கோசஙகளு மென்னபபட்ட கறபித அசத திய காரண காரிய வுபாதிகளால சூரியனும, மின்மினியும, ராஜனும சேவகனும, சமுத்திரமும கிணறும; மேருவும அணுவுமபோன்ற விரோத தாமஙகளுற்று ஏகத்துவ முற்ற வாசியார்த்தத்தால ஐககியங கூறாமல, லக்ஷணை களில இங்கு பயனின்றிய ஜஹதி, அஜகதி (விட்டது விடா தது)களை விட்டு ஜகதகதி (விட்டுவிடாத) லக்ஷணையால, 'சோயந் தேவதத்த னென்னும வாககானது விரோத தாமஙகளை நீக்கி யவன தேகத்தவ மறிவிப்பதுபோல, பிரஹ்மத்தில கற்பிதத்துவைதத்தை நிஷேதிக்கும அச

சுருதிப் பிரமாணத்தாலும், தன் விவேக ஞானத்தாலும், ரஜ்ஜுவில் சர்ப்பம், சொப்பனம்போலக் கற்பிதமாய், அசத்தியமான திருசிய விருத்த வுபாதிகளை யிரண்டிடத்தும் 'நேதி, நேதி' யென யுக்திகொண்டு நீக்கவே, முறையே ராஜ்யபார, கேடயாதிகளாகிற ராஜ, சேவக ரூபாதிகளை யகற்றும்போது, ராஜ, சேவக ரில்லாமல் மனுஷ்யத்வத்தா லொன்றுவதுபோல, ஈசுவர ஜீவரின்றி, சின்மாத்ரமாய், அகண்டைகரசமாய் விருத்தமின்றி சேஷித்து (மிஞ்சி) நின்ற சுத்தமான லக்ஷியார்த்தத்தால் சுபாவ ஐக்கியத்தை நன்றாய்க்கூறுகின்றன. இந்தப் பிரஹ்மாத்மைக்கிய வகண்ட பாவத்தை மஹாத்துக்களாயுள்ள ஞானிகள் பரிசயிப்பதால், நீயும் தேகாதி யசத்துக்களை நானென்றென நன்றா யபவாதித்து சொருசித்தமாய், ஆகாசம்போ லதிசூக்ஷ்மமாய் எப்போதும் பிரகாசிக்கும் சத்திய ஞானானந்த பரிபூர்ண பிரஹ்மமே நானென்று தெளிவான புத்தியா லுன்னை யறிவாயாக. மண்ணினுண்டாய், மண்மயமாகவே யிருக்கும் கடாதி சகலமும் மண் மாத்ரமே யாதல்போல் சத்ரூபப் பிரஹ்மத்தி லுண்டாய், பிரஹ்ம மயமாகவே யிருக்கும் இவ்வுலகனைத்தும் பிரஹ்ம மாத்ரமயும், சொப்பனத்தில் நித்திரையாற் கற்பிக்கப்பட்ட தேச, கால, விஷய, ஞாதுரு முதலிய சர்வமும் மித்தையாதல்போல் இந்த ஜாக்கிரத்திலும் தன்னஞ்ஞானத்தால் கல்பிக்கப்பட் டன்யம்போற் றோன்றும் தேக, கரண, பிராண, அகங்காராதி ஜகம் சுத்த மித்தையாயும் இருத்தலால், தன்னி லன்யமா யெதுவுமின்றி சத்தியமாய், ஆத்மாவா யிருக்கும் அதிசாந்த, நிர்மல, அத்வைதப் பிரஹ்மமெதுவோ? சத்தியமாக, அது நீயாகிறாய் (தத்துவமசி). ஜன்மாதி ஷட்பாவ விகாரங்களும், ஜாதி, நீதி, குல, கோத்திர, நாம, ரூப, குறி, குண, குண (நல்ல) தோஷ, ஆதி, வியாதிகளும், பசி, தாக, சோக, மோக, ஜரா, மரணமென்னும் ஷடூர்மிகளும், தேச, கால, விஷயாதிகளுமின்றி, சகல வாக்குகளாலு மறியப்படாது ஞானக்கண்ணா லறி

யப்படுவதாய், யோகிகளது ஹிருதயத்தால்* பாவிக்கப் பட்டு, மற்றக் கரணங்களால் பாவிக்கப்படாததாய், ஸ்தூல புத்தியான தறிதற்கரியதாய், பிராந்தி கல்பித மித்யா ஜகத்திற்கும், தனக்கும் தானே யாசிரயமானதாய், ஜகத் சிருஷ்டி, ஸ்திதி, நாச ஏதுவாய், காரிய நாநாரூப சர்வ ஜகத்திற்கும், தனக்கு வேறு காரணமின்றிய பரம காரண மாயினும், காரண, காரிய விலக்ஷணமாய், ஸத், அஸத் விலக்ஷணமாய், க்ஷர (மாயா கார்யம்), அக்ஷர (மாயை) விலக்ஷண பரமாக்ஷரமாய், பிரமையால் சுவர்ணம்போல நாம, ரூப, குண, விகார, பேதமாய்த் தோற்றினும் நிர்நாம, நிரூப, நிர்க்குண, நிர்ப்பேத, நிர்விகாரமாய், நிஸ் தரங்க சமுத்திரம்போல நிச்சலமாய், நித்ய, நிஷ்கள, நிரஞ்சன, நிருபம, நிர்விகற்ப, நித்யமுக்த, அவ்யய, அநாதி, பரிசுத்த, பராத்பர, பிரத்தியக், அகண்ட, பரி பூர்ண, சத்திய, ஞானகன, அனந்த, ஆனந்த, ஏக ரசமா யுள்ள பிரஹ்மமெதுவோ? சத்தியமாய் 'அது நீயாகிறாய்' (தத்துவமஸி). இவ்வர்த்தத்தை யுக்தியோடு சூக்ஷ்ம புத் தியால் ஹிருதயத்தில் பின்னமின்றி நிச்சலமாய் எப்போ தும் சிந்தை செய். அதனால் கரதல ஜலம்போல் சம்சய மின்றிய தத்துவ ஞானமுண்டாகும். சேனாசமூக மத்தி யில் அரசனைப்போல தேகாதி சங்காதங்கட்குள் ஞான மாத்ரமா யிருக்கும் பிரஹ்ம ரூப ஆத்மாவை விவேகித் தறிந்து அதற் கன்யம்போற் றோன்றும் திருசிய வர்க்கங் களை யவ்வஸ்துவாகவே பிரவிலாபித்து அவ்வாத்மாவா கவே யெப்போது மிருப்பதா லானந்தமுற்று பசாந்தனா வாய். புத்தியாகின்ற குகையிலே சத், அஸத்துக்கு வில க்ஷணமான அத்விதீய சத்தியப் பிரஹ்மவஸ்து விருக்கின் றது. எவன் அவ்வஸ்துவாகவே யெப்போதும் அந்த ஹிரு தய குகையில் ஸ்திரமாய் வசிக்கின்றானோ? அவனுக்குப் பின்னர் சரீர குகையில் பிரவேசமே யில்லை (பிறப்பில்லை).

இவ்வாறு வஸ்துவை யறிந்தாலுங்கூட, சம்சார காரணமாய், நான் கர்த்தா, போக்தா என மிகவும் கெட்டிப்

பட்டு மகா பலமுள்ள அநாதி வாசனையானது அடிக்கடி தடையாக வரும். சுவாத்தும திருஷ்டியால் ஸ்திரமாகத் தன்னிலே நின்று சிறிதும் தவிராத தன் பிரயத்நத்தால் வரும் அவ்வாசனைகளை யப்போதே அடக்கிவிடு. வாசனா க்ஷயத்தைத் தான் வசிஷ்டாதி முனிசுவரர் முக்தி யென்பர். லோக வாசனை, தேக வாசனை, சாஸ்திர வாசனைகளால் ஆத்ம ஞானம் உள்ளபடி தோன்றாது. அன்றி 'சம்சார காராக்கிருகத்தி (சிறைச்சாலையி) னின்று மோக்ஷமுற (விடுபட) இச்சிப்பவர்க்கு இவ்வாசனாத் திரயமும் இருப்பு விலங்காம்' என்றறிஞரு முரைப்பதால் லோகப்பற்று சாஸ்திரப் பற்றுடன், தேகத்தைப் பிராரப்தம் போஷிக்குமெனுந்திட நிச்சயத்தால் தேகப்பற்றையும் விடுத்து, மகா தைரியவானாய், சலிப்பின்றி மிக முயற்சித்து, சத்துவ, ரஜோ குணங்களால் தமோ குணமும், மிசிர சத்துவத்தால் ரஜசும், சுத்தத்தால் மிசிரமும் போவதால் சுத்த சத்வத்தை யனுசரித்தவனாய், சாவதான சித்தத்தோடு 'தத்துவமசி' முதலிய மகா வாக்கியங்களால் ஜீவப் பிரஹ்மா பேதங் கூறும் சுருதிப் பிரமாணத்தாலும், தன் யுக்தியாலும், ஸ்வானுபவத்தாலும், 'நான் ஜீவனன்று, புத்தி விருத்தி சாக்ஷியாய் அஹமென அனுபவமாகும் நானே அகண்ட பரிபூர்ணப் பிரஹ்மம்; அந்தப் பிரஹ்மமே நான்' என்னும் அகண்டப் பிரஹ்மாத்மைக்கிய விருத்தி ஞானக்கை, இத்தேகத்தில் அகம் புத்தி சேஷமில்லாது நாசமுறும் வரையிலும், சொப்பனம்போ லிஜ்ஜீவ ஜகத் தோற்றம் விளங்கும் பரியந்தமும், பிக்ஷையெடுத்தல், ஜல, மல விசர்ஜ்ஜன மின்றி தியானிக் கற்ப மும் வேறு வேலை யின்மையி னெல்லாக் காலத்திலும், நித்திரை, லோக வார்த்தை, சபதாதி விஷயங்கள், சுவாத்தும சிந்தனையை மறத்தல் இவைகட்குக் கால் நொடி நேரமு மிடங்கொடாமல் நிரந்தரமாய் ஹிருதயத்தில் அனுசந்தானிக்கும் ஏகாத்தும நிஷ்டாபலத்தால்,

வாசனையற்று வஸ்துவில் திடபுத்தி யுண்டாதற்பொருட்டு அவ்வாசனை வேகத்தால் ஒவ்வோர் காலமுண்மைபோற் றோற்றிவரும் தேகேந்திரியாதிகளில் நான், என்னது, எனும் எண்ணமாகின்ற அத்தியாசமனைத்தையும் அடியோடு நீக்கிவிடுக. ஜலாதி சம்பந்தத்தால் தோற்றும் துர்க்கந்தத்தால் மறைபட்டது போன்றிருக்கும் அகிற் கட்டையின் சுபாவ சுகந்தமானது, அக்கட்டையை அரைப்பதால் துர்க்கந்தம் நீங்கவே சுயமாய்ப் பிரகாசிப்பதுபோல இடைவிடாத ஞானப்பியாச மென்னும் அரைத்தலால், மனம் ஆத்மாவில லயிக்கு மவ்வளவே வாசனையும் நீங்கலால், சதாகம ஆத்மாவில நிஷ்டையால் யோகிகட்கு மனம் நாசமுற, அதனால் ஹிருதயத்துள்ள அனாத்ம பாஹ்ய வாசனைகள் நிசசேஷமாய் நீங்கவே, அவ்வாசனா ஜாலத்தால் மறைபட்டது போன்றிருந்த பரம ஆத்மானுபூதியும் பிரதி பந்தமின்றி, நிர்மலமாய், சுயமே பிரகாசிக்கும். சர்வப் பிரகாரத்தாலும் திருசியமாய்த் தோன்றும் அகங்காராதி சாவமும பொய்யாய், விகாரியாய், க்ஷணிகமாய்க் காணப்படுவதால் சர்வத்தையு மறிதல கூடாது ஜடமா யிருத்தலால், இவ்வகங்காராதிகளையும், மனோரத, சொப்பன, சுழுப்திகளில் அடிக்கடி யில்லாததாய்க் காணப்படு மவற்றின் விகாரங்களையும், சுழுப்தியிலும் நீங்காதிருந் தறிவதனால் சுருதி சொல்லும்படி ஜன்ம நாசமின்றிய நித்தியமாய், சாக்ஷியாய், நிர்விகாரமாய், சத்து, அசத்து விலக்ஷணமா யிருக்கும் "அஹம்" பதார்த்தப் பிரத்தியக் காத்மா வாகா. ஆதலால் மாதா பிதாக்களின் மலத்தால பிறந்த மல, மாமிச மயபிண்டமான இப்பிண்ட தேகத்தைச சண்டாளன்போ லதி தூரத்தில் நீக்கி, இத்தூலத்திலும், புத்தி கற்பித இத னபிமானத்திலும், இதிலுள்ள நாம, ரூப, குல, கோத்திர, ஜாதி, ஆசிரமாதிகளிலும், அங்ஙனமே லிங்க தேகத்திலும், கர்த்திருத்துவாதி யதன் தர்மங்களிலும் அகம் புத்தியை விடுத்து சத்திய ஞானாநந்த ஆத்மாவில் அகம் புத்தி

வைதது எவ்வஸ்துவில கண்ணுடியில நகரப பிரதி பிம்பமபோ லிஜ்ஜக மெல்லாம சாயா மாததிரமாய் விளஙகுகிறதோ? அநத சாவாதிஷ்டான சுயம பிரகாசப பிரஹமததில மகா காசததில கடா காசததைபபோல ஆதமாவைப பிரவிலாபிதது 'அது நான' என்று அபினனமாய, அரூப, அககிரிய, அதவைத, அகணட, சசிதானநத சொரூபமான உன நிஜ ரூபததை யனுபவமா யறிநது கூததாடி தன நிஜ ரூப மடைநது வேஷ ரூபததை நீககி விடுதல போலப பொய யுடமபைவிட்டு, இபபிணடாணட பிரஹமாணடததை மபபாணடமபோல விசாரிதது அறிவாலகறறி, அசஞசல அகணட பாவததால அகணட சசொரூப கேவல பிரஹம மாததிரமாய சதாகாலமும சுகமாகவே யிருநது கிருத கிருததியனாயப பரம சாநதி யடைவாயாக.

புருஷனுககு சமசார காரணமான பிரதி பநதஙகளனேகமிருககினறன, முதல விகாரமாச சொலலபபடும அகஙகாரமே யவை யனைததிறகு மாதி காரணமாம. அனநத மகிமை யுளள அகணட, ஏகரச, நிரவிகார, சததிய ஞானாதம ஸவரூபியான வுனககு இவவகஙகாரததோடு அததியாச தாதாதமிய வசததா லேயே ஜனம, மரண, ஜரா, துககாதி சமசாரப பநதமடைநதாயனறி சுபாவமாக சிறிது மிலலாமையாலும, தேகததில விஷ தோஷம அணுப மிருககினும ஆரோககிய மிலலாதது போல, ஆறாமேனும அஹஙகாரத தோடு சமபநத மிருககுமவரை யாரககு மெவவளவும மோக்ஷ மெனனும பேசசு மிலலாததாலும, தமசால மூடப பட்ட மூட புததிபோல முனபு மதானறிய அகஙகாரமும, அதன காரியஙகளும விகறபமும சேட மினறி பநதிய நம சிததலால பிரஹமாதமைககிய ஸ்திதி பிரதி பநத மினறி விளஙகலின, பிரகதி யககாதமததுவ வமவகததால 'அது நான' எனவே சுயமபிரகாச, பரிபூரண, சதானநத ஸ்வரூபததுவததை

யடைந்து ராகுவால் விடுபட்டு நிர் மலமாய்ப் பிரகாசிக் கும் பூர்ண சந்திரனைப் போல் அவ்வகங்கார முக்தன் அநுவாகவே சதா பிரகாசிப்பதாலும், ஹிருதய மாகின்ற பூமியில் மகா பல முள்ள அகங்கார மென்னு மதி பயங் கர சர்ப்பத்தால் சுற்றப்பட்டு, அதன் குணத்திரயமென் னும் சிரத்திரயத்தால் எவருமடையாவண்ணம் ரக்ஷிக்கப் படுகின்ற பூர்ணனந்தம் கொடுக்கும் பிரஹ்மானந்த மஹா நிதியை, மகா தைரியத்தோடு சுருதி சம்மத அநு பவ ஞான மென்னும் பெரிய வாளினால் அதன் கோர மான தலை மூன்றையும் வெட்டி அவ்வகங்கார முத்தலைப் பாம்பை முற்றுந் தொலைத்தவனே அடைந்தனுபவிக்க சமர்த்தனாதலாலும், நீயும், கர்த்தாவாய், விகாரியாய் ஆத்மப் பிரதி பிம்ப முற்று அதனால் சத்துப் போல் தோன்றும் அகங்கார்த்தில் ஆத்ம புத்தி விட்டு அவ்வ கங்காராதிகளிற் சென்ற விருத்தியினை யந்தர் முகமாகத் திருப்பி, புஜிப்பவன் தொண்டையிலடைத்த முள் போனு னக்குத் தீங்கு செய்து வந்த உன் சத்துருவான அகங் காரத்தை ஞான வாளால் கொன்று, உன் பரமார்த்த சொரூப மடைந்ததால் இதர ஆசையை விட்டவனாய் ஸ்வஸ்வரூப சாம்ராஜ்ய சுகத்தை யிஷ்டப்படி நன்றாயநு பவித்துப் பூர்ணத்மாவாய் அந்நிர்விகற்பப் பிரஹ்ம பதத் தில் எப்போதும் தூஷ்ணீம் பாவ (மௌன) முற்றிருக் கக் கடவாய்.

இவ்வாறு அகங்காரம் கொல்லப்பட்டாலும், பின் னர் க்ஷணமாத்ரமேனும் மனதால் சிந்திக்கப்படின் மீண்டு முயிர் பெற்றுக் காற்று லலையுங் கார்கால மேகம் போலனந்த விக்ஷேபங்கள் செய்யு மாதலாலும், தேகாதி திருசிய விஷயங்களில் நான், எனது முதலிய சிந்தனை யுள்ளவனே பாச பெத்தனும், அஃதற்றவன் முக்தனு மாகலின், விஷய சிந்தனே யே பேத பாவத்தால் பவ பந்த ஏதுவாகலானும், இவ்விஷய சிந்தனையால் அவ்வகங்கார

சத்துருவுக்குக் கொஞ்சமு மிடங் கொடுக்க லாகாது. வாடிய, எலுமிச்ச மரத்திற்கு விடும் ஜலம்போல் விச்சிந்தனையே அகங்கார முயிர் பெற்றெழுங் காரண மாகும். காரிய விருத்தியால் காரண பீஜமும் விருத்தியாய்க் காரிய நாசத்தால் பீஜமும் நசிப்பதைப் பார்த்தலால், முன்னம் காரியத் (சிந்தனைத்) தை நீக்குக. காரிய சிந்தனை வளர்ந்தால் காரண அகமாதி வாசனையும் அவ்வாசனா விருத்தியால் சிந்தனையும் விருத்தி யாகும். அச்சிந்தனையால் பாகியக் கிரியை யுண்டாம். இவ்விரண்டாலும் அவ்வாசனை மிக வளர்ந்து புருஷ ரனைவர்க்கும் பலவித சம்சார பந்த முண்டாகும். இப்பந்தத்தைச் சேதிக்க முன் சொன்ன மூன்றையும் நசிப்பிக்க வேண்டு மாதலாலும், அதற்கு சர்வதேச, சர்வகால, சர்வாவஸ்தையிலும், 'நானா ரூபமாய்த் தோன்று மிச்சர்வமும் பிரஹ்மமாத்திரம்' என்னும் திருஷ்டியே மிக நல்ல உபாய மானதாலும், இந்தப் பிரஹ்ம பாவனையின் பலத்தால் புன்னம் கிரியை ஒடுங்கி, அதனாலே சிந்தனை (நினைவு) இறக்க, அதனாலே வாசனை க்ஷயமாகும். அவ்வாசனாக்ஷயமே மோக்ஷ மாகும். இங்ஙனம் 'ஸர்வம் பிரஹ்மம்' என்னும் சத்வாசனா முதிர்ச்சியால் அருணப்பிரபையால் இருள் போல் அகமாதி மலின வாசனைகள் லயித்துப் பின் சூரிய னுதிக்கவே இருட்டும், அதன் காரிய சர்வானர்த்தங்களும் சிறிது மின்றி நசிப்பது போல, அத்வைதானந்தானுபவ முதிக்கவே, பந்தமும், அதனாலே வந்த துக்க லேசமுமின்றி முற்றும் நசிப்பதால் நீயும் திருசியமாய்த் தோற்று மிவைகளைட் 'பிரஹ்ம மாத்திரமாய்ப் பிரவிலாபித்து 'அவ்வானந்த கனப்ப்ரஹ்ம மாத்ரோஹம்' என்னும் நிச்சலபாவனையால் பாகியத்திலோ, அந்தரத்திலோ, சர்வகாலமும் சமாதி நிஷ்டனாய்க் கர்மபந்த முள்ளவரையிலும் காலங் கழித்துவா.

இப்பிரஹ்ம நிஷ்டையை ஏககாலத்தும் கிஞ்சித்தும் விட (நிஷ்டையில் பிரமாதம் பண்ண)க் கூடாது, விடின்,

அப்பிரமாதமே (நிஷ்டை தவிர்தலே) மிருத்யு வாகு மென்று பிரஹ்ம புத்திரரான ஸனத்சுஜாத பகவான் விசேஷித் துரைத்திருப்பதன்றி ஸ்வஸ்வரூபத்தினின்று நழுவும் பிரமாதத்தால் மோகமும், அதனுல் அகம் பாவமும், அதனுல் பந்தமும், அதனுல் துன்பமுமுண்டாவதால் ஞானிக்கிப் பிரமாதத்தை யன்றி வேறு அனர்த்த மில்லை. ஜலத்தினின்றும் விலக்கப்பட்ட பாசியானது சற்றும் நில்லாது மீண்டு மதனை மறைத்தல் போல பஹிர் முகப்பட்ட புருஷன் பிராக்ஞு (ஞானியா) யினும் மாயை ஆவரணம் செய்தலால், தன்னை மறந்த மறதியானது விஷய மார்க்கமாய்ச் செல்லு மந்த வித்வானை பராமுகனையும் வியபிசாரி ஸ்திரீயானவள் தன்னிடத்தில் மோகமுள்ள ஜார புருஷனை யலைப்பது போல புத்தி தோஷங்களால் பலவாறு ஆட்டிவைக்கும். என்னை? பிரமாதத்தினுல் சித்தமானது சுவசுவரூபமாகின்ற லக்ஷயத்தில் நின்று அற்பம் நழுவுமாயின் கையினின்று நழுவிப் படிக்கட்டின் மேல் விழுந்த பந்தைப் போலாங்காங்கு பாகிய விஷயங்களில் பாய்ந்து விழும். பின்னர் அவ்விஷயங்களை நல்லதென ஸங்கற்பிக்கும். அதனுல் இது நமக்கு வேண்டும் என்னும் காமமுண்டாம். அக்காமத்தால் புருஷனுக்கு அவ் விஷயானுபவத்திற் குள்ள பிரவிருத்தி யுண்டாகும். அப்பிர விருத்தி யால் ஸ்வரூப நிஷ்டை விட்டுப் போய் அதோகதியி லாழ்ந்து திரும்பியேறி சொரூபத்தை யடைதலின்றி நாசமுறுவான். ஆதலால் பிரஹ்ம நிஷ்டையில் செய்யும் பிரமாதத்தை யன்றிபிரஹ்ம நிஷ்டராயுள்ள விவேகிகட்கு வேறு மிருத்யு வில்லை. அந்நிரந்தர நிஷ்டையுள்ளவனே சித்தி பெறுவானாதலால் சர்வானர்த்த வதுவான பிரமாதத்தாலுண்டாகும் சங்கற்பத்தைத் தள்ளி சாவதானமாய் அசசொரூப நிஷ்டனுகவே யிரு.

---

* கவியில் வசிஷ்டரெனப்பட் டிருக்கிறது.

ஜீவித்திருக்கு மிப்போதே பிரஹ்மாகாரமாக இருக்கும் முக்தி யுற்றவ (முக்த) னே, விதேக ஸ்திதியிலும் அங்ஙனமே பிரகாசிப்பன். 'பேததிருஷ்டி யற்பமேனுமுள்ளவர்க்கு பீதி யுண்டாம்,' என யஜுர் வேத முறைத்தலின், பிரமாதத்தா லெப்போ தாதாவது பரிபூர்ணப பிரஹ்மத்தில் அணுமாத்ர பேதம் பார்ப்பவன் அப்பின்ன திருஷ்டியால் பயத்தை யடைவதுடன் நானாவித சுருதி ஸ்மிருதி நியாயங்களால் நிஷேதிக்கப்பட்ட அசத்தான தேகாதி திருசியத்தில் ஆத்ம புத்தி செய்பவன் நிஷித்த கர்மம் செய்யும் பாபியைபபோல துக்கத்தின் மேல் துக்கத்தையே யடைவன். அன்றி சத்தியானு சந்தான பரன் (மெய்யன்) துக்கவிமுக்தனாய் மகத்துவமடைவதையும், மித்யானுசந்தான பரன் (பொய்யன்) நாசமுறுவதையும் *அசோர, சோரர்களிடத்துப் பார்த்தலானும் அசத்தாயுள்ள பாகிய விஷய நிரோதத்தால் மனப்பிரசாதமு (தெளிவு) ம், அதனால் பரமாத்ம தர்சன (ஞான) மும், அதனால் சம்சார பந்த நாசமும், சித்திப்பதால் பாகிய நிரோதமே மோக்ஷமார்க்க மாதலானும் சத்தியா சத்திய விவேகியாய், சுருதிப் பிரமாணத்தால் பரமாத்ம நிர்ணய மறிந்த புத்திமானாயுள்ள எந்த முமுக்ஷு தான் அசத்தானது தன் நாச ஹேதுவென்றறிந்தும் பாலன் போலதனைப் பற்றுவன்? எவனும் பற்றானாதலானும், மேன்மேலும் துர்வாசனையையே விருத்தியாக்கிப் பந்த ஹேதுவா யுள்ள அசத்திய பாகியானுசந்தானத்தை விட்டு விவேகியாயுள்ள யதியானவன் 'சத்திய ஞானானந்த பரப்பிரஹ்மமே வாஹம்' எனு மனுபூதியால் அவித்யா காரிய சர்வ துக்கங்களையும் நீக்கிப் பரமானந்தங் கொடுக்கும் பிரஹ்ம நிஷ்டையில் தற்பரனா யிருக்க

களவில சம்சயமுள்ள பதின்மர் கைகளிலும் காய்ந்த இரும்பினைக் கொடுக்க எடுத்தவனை மாத்திரம் தகிக்க மற்றவர் சுகமுறுகின்றனர்.

வேண்டும். விரோத லக்ஷண முற்றிருத்தலின், ஜாக்கிர முள்ளவனுக்கு சுழுப்தியும், சுழுப்தனுக்கு ஜாக்கிரமு மில்லாததுபோல தேகாதி யபிமான முள்ளவனுக்கு முக்தியும், சராசரங்களினுள் வெளியிலும் தன்னை யேகமாய் அவைகட்கு சாக்ஷியாயும், அதிஷ்டானமாயும் சூக்ஷ்மமான தன் மனத்தால் பார்க்கும் சர்வாத்ம பாவத்தினுல் சர்வோபாதிகளையும் நீக்கி யகண்ட பரிபூர்ணமா யிருப்பவனே முக்தனுகலின் அம்முக்தனுக்கு தேகாதி யபிமானமு மில்லை. ஆதலால் இச்சர்வாத்ம பாவத்தையன்றி சர்வப் பிரகாரத்தாலும் பவபந்த மோக்ஷத்திற்கு வேறு வழி யெதுவுமின்று. சர்வாத்ம பாவமோ? சதா காலமும் ஆத்மாவில் நிஷ்டையால் திருசியத்தைப பற்ருதக்ற்றவதால் ஸித்தியாகும். தேகாத்ம புத்தியோடு பாஹ்ய விஷயானுபவத்தில் ஆசையுள்ள மனமுடையவனுய் அதற்கான கிரியைகளையே எப்போதும் செய்துக்கொண் டிருப்பவனுக்கு எவ்வாறு திரிசியத்தை யகற்றக்கூடும்? கூடாதாகலின், ஸர்வ, தர்ம, கர்ம, விஷயங்களையும் துறந்து தத்வ க்ஞனுய், நிரந்தர மாத்ம நிஷ்டாபரனுய், சதானந்தத்தி லாசக்தியுள்ள மனதுடையவனுக்கே பிரயத்னத்தால் திருசிய நீக்கங்கூடும். இவ்வாறு திரிசியத்தை நீக்கி சந்ததமும் சர்வாத்ம பாவம் சித்தித்தற் பொருட்டே 'சாந்தோதாந்த:' எனும் சுருதியானது சாந்தராயுள்ள யதிகட்கு சிரவணுதி கர்மஞ் செய்தபின் சர்வதா நிர்விகற்ப சமாதியை விதிக்கின்றது. ஆதலால் அந்நிச்சல நிர்விகற்ப சமாதி யடைந்தவனன்றி அனந்தகோடி ஜன்மாந்தர வாசனை யுள்ளவன் எவ்வித பண்டிதனுயினும் அகங்காராதி திருசிய நாசஞ்செய்ய ஒருபோதும் சக்கியமாகாது.

ஆவரண சக்தியின் பலத்தினுல் விக்ஷேப சக்தியானது அக்ஞனுகின்ற புருஷனை மோக காரணமாயுள்ள இவ்வகங்காரத்தோடு கூட்டி வைத்து அதனது குணங்க

ளால் விருதாவாய்ப் பேய்போ லாட்டி வைக்கின்றதாலும், இவ்வாவரணம் நசிக்கின் ஆத்மா சம்சயாதிப் பிரதிபந்த ரகிதமாய் சுயம் பிரகாசிக்கும், விக்ஷேபமு மில்லாமற் போம். இருக்கினும் சுத்தப் பொய்யாகவே தோற்றிக்கொண்டிருக்கு மாதலாலும், இவ்வாவரணம் நசியாவிடின் விக்ஷேபமும் நசியா தாதலாலும், க்ஷீர ஜல விபாகம் போலதிருக், திருசிய விபாகத்திலேயே அவ்வாவரணம் நசிக்கு மாதலாலும், ஸ்பஷ்டமான ஞானத்தால் பிறந்த நல்ல விவேகமே திருக் (ஆன்மா), திரிசிய (அனான்மா)ங்களை நன்றாய்ப் பிரித்து அவித்யா காரிய மோகரூப பந்தத்தைக் கெடுக்கு மாதலாலும், விவேகியாயுள்ள புருஷன் அவித்தையா லுண்டான புத்தி தானே அயஅக்கினி சம்பந்தம்போல சத்ரூப ஆத்மாவோடு மித்யா தாதாத்மிய முற்று ஞாதுரு, ஞான, ஞேயப் பிரபஞ்சாகாரமாய் விஜிரும்பித்தலின் சித்தப் பிரமண, மனோரத, சொப்பன மிவைகளிற்போலக் காணப்படு மவை அசத்யமேயாவதோடு பிரகிருதி விகாரமான இவ்வகங்காராதி தேகாந்தம்ா யுள்ளவையும், மற்றுந் திருசியமாயுள்ள சர்வ விஷயங்களும் க்ஷணத்தில் நாநா விகார முறுவன; சத்திய ஆத்மாவோ? ஓர் காலும் விகார முறாது. சதசத் விலக்ஷணமாய், புத்தியாதி சாக்ஷியாய் 'அகம்', பதலக்ஷ்யார்த்தமா யிருக்கும் இவ்வேக நித்தியாத்வைத அகண்ட ஞான பிரத்தியக் காத்மா, ஸதானந்தகன பரமாத்மாவே' என்றிவ்வாறு விவேகத்தால் சத்ய (ஆன்மா), அசத்தியங் (அனாத்மாக்)களைப் பகுத்து அதில் சத்தியமான ஆத்மாவை நிச்சயித்துத் தன் ஞான திருஷ்டியால் 'இந்த நானே அகண்ட ஞான பரப்பிரஹ்ம சொரூபம்' என் றனுபவமாய்க் காணுந் தன் னாத்ம தரிசனத்தால், ஆவரணமும், மித்யா ஞானமும், விக்ஷேபத்தால் வந்த துக்கமனைத்தும் ரஜ்ஜு தரிசனத்தில் நிவிர்த்தியாவதைப் போல நிவிர்த்தியாகலின், இவற்றில் நின் றும் முக்தனாய்த் தானே பரம உபசாந்தி யடைகின்றான். இங்ஙனம் நிர்வி

கற்ப சமாதியால் அத்வை தாத்மாவை எப்போது தரி சிக்கின்றனோ? அப்போது தான் அக்ஞானமும், அதனது காரிய ஹிருதயக் கிரந்தியும் நிச்சேஷமாய் நசிக்கும். இவ்வாறு பரஜீவைக்ய ஞானாக்கினியால் அவித்யா ரண்ய மானது சேஷமின்றி நசித்தபின் அத்வை தாத்ம ரூப மடைந்துள்ள அம்முக்தனுக்குப் பவபீஜம் வேறே திருக் கின்றது? இன்மையின் புனர் ஜன்ம மரண ரூப சம்சார மின்றாம். ஆதலின் விவேகி யானவன் சம்சார பந்த மோக்ஷத்தின் பொருட்டு அவசியம் ஆத்ம தத்வத்தை யறிய வேண்டும்.

இந்நிர்விகற்ப பரமாத்வை தாத்மாவில் புத்தியின் தோஷத்தாலேயே தோன்றும், நீ, நான், இது முதலிய கற்பனை விகற்பங்க ளனைத்தும் சமாதியில் பிரஹ்மானுப வத்தா லபாவமாம். அன்றி உபாதி பேதத்தால் பின்ன னாய்க் காணப்படுந் தானே உபாதி யற்றால் ஏகனாய்ப் பிர காசித்தலின், இவ்விகற் போபாதி லயித்தற் பொருட்டு சதா சமாதி நிஷ்டனா யிருத்தல் வேண்டும். இவ்வேக நிஷ்டையால் பிரஹ்மத்தி லாசக்தியுள்ள புருஷன் அப் பிரஹ்மத்தை நிச்சலமா யெப்போதும் தியானிக்கும் பிரஹ்மானுசந்தான பலத்தால் புழுவானது சர்வ காரி யங்களையும் விட்டுக் குளவியைத் தானே சதா தியானித் துக் குளவியே யாவதுபோல அப்பரமாத்ம சொரூபமே யாகிறான். இங்ஙனம் நிரந்தரம் செய்யும் பிரஹ்மாப்பி யாச பலத்தால் புடம் வைத்தலால் களங்கமற்று சுத்த மான தன் சுபாவ குணத்தையடையும் சொர்ணம்போல, சத்வ, ரஜஸ், தமோ குணங்களாகிற மலத்தை விட்டுத் தன் சுத்தமான சுபாவமுற் றிவ்வாறு பரிபக்குவமான மனதானது எப்போது பிரஹ்மத்தில் லீனமா (அப்பினுப் பென அம்மயமாய் லயிக்)கின்றதோ? அப்போது தான் அத்வைதானந்த ரசானுபவத்திற் கேதுவான நிர்விகற்ப சமாதி ஸித்தியாகும். அச்சமாதியால் ஸமஸ்த வாச

ளுக் கிரந்தியும் ஸர்வ கர்மங்களும் நசிப்பதோடு தன் பிர யத்நமின்றியே உள்ளிலும், வெளியிலும், எவ்விடத்தும், எக்காலத்தும்சொரூபப்பிரகாசம் சுயமேயனுபவமாகும். இவ்வாறு சமாதியா லதி சூக்ஷ்மமான விருத்தி ஒன்றால் அவ்வதி சூக்ஷ்மப் பிரஹ்மம்,அதி சூக்ஷ்ம புத்திமான்களா லனுபவமா யறியப்படுமே யல்லாமல், ஸ்தூல திருஷ்டி யால் அறிவதற் கெவராலும் சக்கிய மாகாது. அங்ங னமே சாந்தி, தாந்தி, உபரதி, திதிக்ஷை யோடுங்கூடின யதியானவன் சதா சமாதி நிஷ்டையால் தன் சர்வாத்ம பாவமடைந்து அவித்யாந்த காரத்தாலுண்டான ஸமஸ்த விகற்பங்களையு மகற்றி நிஷ்கிரிய நிர்விகற்பனாய் பிரஹ்மா காரமாகவே யெப்போதும் சுகிப்பன். இவ்வாறு சப் தாதி பாகிய விஷயங்கள் சுரோத்திராதி இந்திரியங்கள், மன மிவற்றைத் தானாகிற ஞானாத்மாவில் பிரவிலாபித்து நிர்விகற்ப சமாதி யடைந்தவர் எவரோ? அவர்களே சம் சார பாச பந்தத்தினின்று முக்தராவரன்றிப் பரோக்ஷ ஞானம் பேசு மேனையோர் ஒருபோதும் முக்தராகார். இந்நிர்விகற்ப சமாதி யொன்றால் நிச்சயமாக பிரஹ்ம சொரூபத்தைப் பிரதிபந்தமின்றி ஸ்பஷ்டமா யறியலாம். அஃதின்றேல் சதா மன விருத்தி சஞ்சலிப்பதால் இதர விருத்திகளைச் சாரும். ஆதலால் இந்திரிய, மனதுகளை யடக்கி சந்ததமும் நின்னாத்மாவில் நிஷ்டையுள்ளவனாய் அவ்வேகாத்ம தரிசனத்தால் காரிய ஸஹித அவித்தி யாந்த காரத்தை யசேடம் நாசஞ்செய்து அவ்வாத்மா வாகவே எப்போது மிருப்பாயாக. சிரவணத்தில் மன னம் நூறு மடங்கும், அதில் நிதித்தியாசனம் லக்ஷம் பங் கும் பலாதிக்ய முள்ளதாம். நிர்விகற்ப சமாதியால் பெறும் பலத்திற் கோரளவே யின்றாம்.

இச்சமாதி யோகத்திற்கு வாக்கு மௌனம்,அபரிக் கிரகம் (ஏதும் வாங்காமை), நிராசை, கிரியை யின்மை, எப்போதும் ஏகாந்த வாசம், என்னு மிவை யெல்லாம்

ஆரம்ப மார்க்கமாம். ஏகாந்த வாசத்தால் இந்திரிய மடங்க, அதனால் மனமடங்க, அம்மன நிரோதத்தால் அஹமாதி வாசனையற்று யோகியானவன் சதா நிச்சலப் பிரஹ்மானந்த ரசானுபவ முறுவதால் யோகி யெப்போதும் தன் பிரயத்தனத்தால் சித்த நிரோதமே செய்ய வேண்டும். முன்னம் வாக்கை மனதிலும், மனதை புத்தியிலும், அப்புத்தியை சாக்ஷியிலும் அடக்கி அச்சாக்ஷியை பரிபூர்ண நிர்விகற்பப் பிரஹ்மமாக அறிவதால் பரம சாந்தி யடைவாயாக. தேக, இந்திரிய, பிராண, மனோ புத்தியாதிகளில் சித்தமானது எவ்வுபாதியுடன் சேருமோ, தியானியும் அம்மயமேயாய் சுகமுறான். ஆதலால் அச்சித்த நிவிருத்தியின் பொருட்டு அவை யனைத்தையு மகற்றிப் பிரஹ்மத்தில் சாந்தி யுறுவதே சதானந்தமாம்.

விரக்தியுள்ளவனே மோக்ஷேச்சையால் பிரஹ்ம நிஷ்டையை யடைந்து அகங்காராதிகளோடுள்ள அகப்பற்றையும் பாகிய விஷயங்களோடுள்ள புறப்பற்றையும் ஒழிக்க சமர்த்த னாகையால் அவனுக்கே அகத்துறவு, புறத்துறவு இரண்டும் ஸித்திக்கும். அன்றி அத்தியந்த வைராக்கியமுள்ள விரக்தனே சமாதியையும், சமாதியுற்றவன திட ஞானத்தையும், அந்தத் தத்துவ ஞானி முக்தியையும், முக்தன் நித்தியானந்தத்தையும் அடைதலின் மோக்ஷகாந்தையைக்கூடி சுக மனுபவிக்க விரக்தியே முக்கிய மார்க்கம். இதனையன்றி சுக மடைவிக்கும் காரணம் எங்குங் காணேம். இவ்வைராக்கியமானது அதி சுத்த ஆத்ம ஞானத்தோடு சேர்ந்தால் அவசியம் மோக்ஷ சாம்ராஜ்ய சுக மளிக்கும். பக்ஷிக்குள்ள பக்ஷத்துவயம்போல மோக்ஷ உப்பரிகை (மாடி)யி லேறப் புருஷனுக்கு அத்தியாவசியமான வைராக்கியம், ஞானம் என்னு மிரண்டில் ஒன்றின்றேனும பூகதி சித்தியாது. ஆதலின் நாச ஏதுவான விஷசம விஷயத்திலுள்ள ஆசையை யறுத்து ஜாதி, குல, ஆசிரமத்தில அபிமானத்தையும் சர்வ கர்மங்களை

யும் தூரத் தள்ளி இவ்வஸத்திய தேகாதிகளில் அகம் புத்தியை விட்டு வாஸ்தவத்தில் நீ சாக்ஷியாய், நிர்மலாத்மைவைதப் பிரஹ்மமாகவே யிருக்கிறு யாதலால் உன்னுத்மாவிலேயே சதா நாட்டம் வைத்திரு.

ஸர்வ சாக்ஷியாய் சுயஞ் ஜோதியாயுள்ள இந்தப் பிரஹ்ம ரூபாத்மாவானது விக்ஞான மயகோசத்தில் அஹம், அஹம்' எனவே யனவரதம் பிரகாசித்தும் பஞ்சகோச விலக்ஷணமாய் 'அகம்' அனுபவத்தால் லக்ஷிதமான நித்யாபரோக்ஷ ஆத்ம சொரூப மாத்ரமாய் விளங்கும் இந்த லக்ஷியப் பிரஹ்மத்தில் ஹிருதயதனை ஸ்திரமா யிருத்தி, பாகியேந்திரியங்களே யதனதன் கோளக (ஸ்தான)த்திலேயே யமர்த்திச், சரீரத்தை யசையாமல், அதில் உதாஸீன புத்தியோடும் 'அஹம் பிரஹ்மாஸ்மி, பிரஹ்மைவாஹம்' என்னும் இதர விஜாதீய விருத்தியின்றிய பிரஹ்மாத் மைக்கிய அகண்டாகார தன் மயாவச்சின்ன ஸஜாதீய விருத்திப் பழக்கத்தால் மனதை மெல்ல மெல்ல நிச்சலமாக்கி, ஆத்மபரைக்கிய பூர்ணுனுபவத்தை நன்று யறிந்தவனுய், அப்பிரஹ்மானந்த ரசத்தை சதா காலமும் சந்தோஷமாய்ப் பானம் பண்ணு, துச்சமாயுள்ள மற்ற தேகாதி யனுத்மப் பிரபஞ்ச சிந்தனையால் என்ன பிரயோஜனம்?: ஆதலால் சர்வ துக்க காரணமாய் ஹீனமான இவ்வனுத்ம சிந்தனையை விட்டுத் தானு யிருக்கும் ஆனந் தாத்மாவை 'நான்' என திடமா யறிந்து, அகங்காராதிகளில் அஹம் புத்தியை யகற்றி கட, படாதிகளிற்போ லவற்றிலுதாசினனுய் மோக்ஷ ஏதுவான ஆத்ம சிந்தனையே அனிசம் செய்வாயாக.

கடம், குசூலம் (குதிர்), ஊசி முதலானபின் னுபாதியறின், ஆகாசம் ஒன்று யிருத்தல்போலும், ஒன்றில் பிராந்தியால் கற்பிக்கப்பட்ட வஸ்து பிராந்தி நாசத்தில் ரஜ்ஜுஸாப்பம்போல் அதில் வேறுகாது அவ்வஸ்துவே யாதல்போலும், ஜலத்தில் பின்னமாய்த்தோன்றும் அலே, நுரை,

குமிழி, சுழி முதலியன, விசாரிக்கில் ஒரே ஜல மயமா யிருத்தல்போலும், கட, கலச, கும்பாதிகள் மண்ணினும் பின்னமாகாது அம்மண்ணே யாதல்போலும், தன் அக் ஞான கற்பிதமான தேக, இந்திரிய, பிராண, மன, அகங் காராதி பின்ன வுபாதிகளற்று மகா காசம்போலேக பூர் ணமாய் விளங்கும் சச்சிதானந்த பரிசுத்தப் பிரஹ்ம ரூபாத்மாவில், மாயா மத்யத்தைப் பானம்பண்ணி அம் மயக்கத்தால் மயங்கியுள்ள மூடர்கள் நான், நீ, அதுவெ னப் பலவிதமாய்க் கண்டு பிதற்றும் பிராந்தி கற்பித தேகாதி அகங்காராந்தமும், மற்றும் மனோ வாக்கா லறி யப்படும் சுத்த மித்ஙதயான பிரஹ்மாதி ஸ்தம் பாந்த மாய்க் காணப்பட்ட ஜகமனைத்தும் அவ்வாத்மாவினும் பின்ன மாகாது பிரகிருதி விலக்ஷண அச்சத்ரூப ஆத் மாவே யாதலால், அகண்டைகரச சித்ரூப பரமாத்மா வான தானே கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, உள், வெளி, மேல், கீழ் எங்குமா யிருப்பதன்றி, பிரஹ்மா, விஷ்ணு, சிவன், இந்திரன், தேவர், மனிதர், முதல் மற் றெல்லாமுமாம். ஜாஸ்தி சொல்வானேன்? சுருதியே மித்யாத்யாசத்தை நீக்க 'துவைதமே யில்லை' யென்றும், ஏகமே வாத்வைதம் பிரஹ்மம்' என்றும் சொல்வதால் ஈசுவரனும், ஜீவர்களும், பரமாணு பரியந்த ஜகத்தும் பிரஹ்ம மாத்ரமே யாம். ஆகாசம்போல நிர்மலமாய், பாகியாந்தரமின்றி நிர்விகற்ப, நிர்விகார, நிச்சல, நிரவதி (எல்லையற்ற) நிர்ப்பின்ன அத்வைதப் பிரஹ்மமே தானு மாம். இனி யறிய வேண்டுவதென்ன இருக்கிறது? 'புரு ஷன் சவ மயமான தேகத்தை நான் என்றறியும்' வரை அசுத்தனாய், ஜனன, மரண, வியாதி முதலிய நானாவித துக்கங்கட்கே யிடமாவன்' என்றும் தன்னில் பிராந்தி யால் கற்பிக்கபபட்டுத் தோற்றும் சர்வ வஸ்துக்களையும் நீககித் தன்னை யதி சுத்த அசல சிவமயமாய் அறியும் போது தானே நிஷ்கிரிய பூர்ணாத்வைத பரப பிரஹ்ம மாய் விமுக்தனாவன்' என்றும் சுருதி யுரைப்பதன்றி, இந்

தப் பிரஹ்மை வாஹும் என்னும் மகத் ஞானமுற்ற ஞானி களும் பாகிய மூற்றும் விட்டு சச்சிதானந்த, ஏகரசப், பிரஹ்மமாகவே பிரகாசிப்ப துண்மை யாதலால் நீயும் மல மயமான இஸ்தூல தேகத்திலும், வாயுவைப்போல் சலிக்கும் லிங்க தேகத்திலும் நான் என்னும் ஆத்மாபி மானம் விட்டு வேதங்களால் ஸ்துதிக்கப்பட்ட 'நித்யா னந்த சொரூபமே தான்' என்று சலிப்பின்றிப் பரிச யித்து அப்பிரஹ்மாகாரமாகவே யெப்போது மிரு.

துவைதம் மாயாமாத்ரம் அத்வைதமே பரமார்த் தம் என்று சுருதியே நேரா யுரைப்பதாலும், சித்தத் தாற் கற்பிக்கப்பட்ட பேத விகற்பங்கள் சித்தம் லயித்து சுக மயமாயுள்ள சுழுப்தியிலேயே யில்லாமை யனுபவ மாதலாலும், சர்பம், ஜலம் முதலிய கற்பித வஸ்துக்கள் காலத் திரயத்திலும் வேறின்றி, அதிஷ்டான ரஜ்ஜு, மரு பூமி முதலனவே யிருப்பதை விவேகிகள் காண்டலாலும், மனோ விருத்தி யாத்மாகாரமாய் நிருவிகற்ப பரமாத்மா வில் சமாதி யுற்றக்கால் விகற்ப மொன்றுமே காணாமை யாலும், மனோ பிராந்தியால் பிரபஞ்ச ரூபமாய்க் காணப் பட்ட இவ்விகற்ப ஜாலங்கள், உண்மை யுணருங்கால், சத்தியமின்றி அசத்தியமாய் பிரஹ்ம மாத்ரமே யிருப்ப தால் ஞாதிரு, ஞான, ஞேய சூன்யமாய் தேஜசில் இருட் டுப்போல விகற்பப் பிராந்திக்கு மூல காரணமான அக் ஞானாந்தகாரம லயிக்கு மிடமாய், கற்பாந்த சமுத்திரம் போ லேகபரிபூர்ணமாய் நிறைந்துள்ள நிர்மல, நிஷ்கிரிய, நிர்விசேஷ, நிர்விகார, நிராகார, அத்வைதப் பிரஹ்ம வஸ்துவில், பேத மென்னும் பேச்சுக்கே யிடமில்லாத போது பேதம் எங்கிருக்கும்? அன்றி நித்திய ஞானானந்த, நிருபம, நிச்சங்க, நிஷ்கள, நிஷ்கிரிய, நிர்விகற்ப, நிர்க் குண, நிர்விகார, நிரூப, நிர்நாமமாய், பந்தமில் நித்ய

முக்தமாய், ஆகாச சமானமாய், சமான ரஹிதமாய், பிர கிருதி, விகிருதி (காரியம்) அற்றதாய், பாவனுதீதமாய், வேதாந்தப் பிரமாணத்தால் ஸித்திப்பதாய், ஹிருதயத்தி லாவிர்ப்பவிப்பதாய், சதா 'அகம்' என்று மனுபவ சொரூபமாய், ஜன்ம ஜரா மரண சூன்யமாய், சாசுவதமாய், சாந்தமாய், சமரசமாய், எல்லையற்று அபாரமாய், நிஸ்தரங்க சமுத்திரம்போல் நிறைந்துள்ள ஏக பரிபூர்ணப் பிரஹ்மத்தை ஞானியும் சமாதியின்கண், ஹிருதயத்தில் 'அகம்' எனவே யபரோக்ஷமா யனுபவிப்பதால் மீண்டும் சம்சார மார்க்கத்திற் செல்லா திருத்தற்பொருட்டு ஹிருதயத்தில் தன் மயமாய்ப் பிரகாசிக்கும் சர்வோபாதிகளு மற்ற சச்சிதானந் தாத்வைதப் பிரஹ்ம பாவனையால் நிர்விகற்ப சமாதியுற்று பிராந்தி காரணமான சித்தத்தை நாசமாக்கி பவதுக்க ஆஸ்பத (இருப்பிட)மான ஹிருதய பந்தத்தை பேதித்து (பிளந்து) அகண்டானந்த வைபவ ஆத்மானுபவ முற்றவனுய், அதி துர்லபமாய்க் கிடைத்த புருஷ ஜன்மத்தை சபல மாக்குவாயாக. பிராரப்த பலத்தால் புருஷனது சாயையைப்போலத் தோற்றன் மாத்திரமாக விளங்கும் சரீரத்தைப் பிணம்போ லதி தூரத்தி லறிவாலகற்றி, அகண்டானந்த ஆத்மாவைத் தானுக வறிந்து, அந்த சத்ரூப நிர்விகற்பப் பிரஹ்மாக்கினியில் தேகாதி பின்னுபாதிகளை, சமூலம் தகித்து, அவ்வானந்தோப் பிரஹ்மத்தில் லயித்த சித்தனுய், நித்திய ஞானுனந்தப் பிரஹ்ம மாத்திரமா யிருக்கும் மகாத்மாவாய், தத்வ ஞானியாய், ஜீவன் முக்தனுயுள்ள யோகியானவன் அகம், புறமும் அவ்வகண்டானந்த ரஸத்தை யனுபவிப்பதேயன்றி யித்தேகத்தைப் பின்னும் எதனை யபேக்ஷித்து என் பொருட் டபிமானித்துப் போஷிக்கப் போகிருன்? பிராரப்த பாசத்தால் கட்டப்பட்ட இத்திருந்தாலும் போனுலும் பசுவானது கழு

ந்தியிலுள்ள மாலையைப்போல லக்ஷியம் செய்யான். ஆத லால் நீயும், நித்திய சுசுத ஞானனந் தாத்மாவை யடை ந்து, இஜ்ஜட மேலோபாதியை தூரத் தள்ளிவிடு. திரும்பி நினையாதே. வாந்தி செய்த வஸ்துவை யபேக்ஷியா [illegible] வைராக்கியமலலவா? கானல் ஜல முதலியவற்றில் நிவிருத்தி, [illegible] விருத்தியே ஞானஞானிகட்குப் பலனுதலைப்போ, [illegible] ஞானத்திற்கு அநந்தியே, துக்க நிவிருத்தி, நித்ய திருப்தி, சதா தானுசுமே [illegible] சமான [illegible] ம், இவை பிரமேயானமாம். அசத்ய துக்க ரூப விஷ [illegible] பிரவிருத்தியே அஞ்ஞானத்திற்குப் பயனாயும் இரு க்கால், ஞானவியால அஞ்ஞான ஹிருதயக் கிரந்தியை [illegible] விஷயேச்சை யின்றிய வித்வா [illegible] பிராந்தி காரணத்தை செய்துவந்த நான்வித [illegible] களை [illegible] பின்னும் செய்வான்? பிரவிருத்தி [illegible] காரணமான விஷயவாஸனை திருக்கின்றது?

வைராக்கியத்திற்கு ஞானமும், ஞானத்திற்கு உபரதியும், உபரதிக்கு ஸ்வாநந்தானுபவத்தா லுண்டாகும் [illegible] சாந்தியும் பலனுயிருத்தலால், இவற்றில் மேன்மே லுள்ள சாதனங்கள் சித்தியாவிடின் பூர்வ பூர்வ சாதனங் கள் நிஷ்பலமாம். போக்ய விஷய வாஸனை பின்னுண் டாகாமை, வைராக்கியத்திற்கு; [illegible] அஹங்காரம் [illegible] ஞானத்திற்குப் [illegible] [illegible] உபரதிக்கும் பலமாகும்.

[illegible] பிரஹ்மாநந்த, பிரபஞ்ச பிரஹ்ம [illegible] உள்ள பேத புத்தியொன்றுமின்றி, சுருதி [illegible] [illegible] பிரஹ்மம் என்றறிந்து, தத்துமான பிர [illegible] நிர்விகற்ப சின்மாத்ர, [illegible] ருத்தியாகிய பிரக்ஞையை (சோரநாயகி, ஜாரபுருஷ னிடத்திற்போல) பிரஹ்மத்தினகண் திடமாய் வைத்து,

அதிலேயே லீன சித்தனாய், எப்போதும் பிரஹ்மாகார மாகவே யிருக்கு மதனால் பாஹ்ய விஷயங்கள் விடுபட்டு, சுழுப்த, பாலர்களைப்போல போக, போக்கியங்க ளன்னி யரா லறிபவனாய், நிஷ்கிரிய, நிர் விகாரனாய், நிரந்தரா னந்தானு போகியாய், ஜகத்தை மறந்தவன்போல் மனமே லயித்திருப்பினும் எப்போதும் ஜாகரூக (விழிப்புள்ளவ) னும், ஜாக்கிரத் தர்ம மில்லாதவனுமாய், சாயைபோற் றொடரும் தேகத்திலும், இந்திரியங்களிலும் இதர வஸ் துக்களிலும் அக, மம பாவமில்லா ததாயினனாய், சம சார தோஷமும், விஷய வாசனை மற்ற விவேகியாய், சித்த மிருந்தும நிசசிந்தனாய், காசகிதனாயும் நிஷ்கள னாய், சென்ற, வரும் கால வஸ்து சிந்தனையின்றித் தற் கால மடைந்தவற்றில் பிரியாப் பிரிய மில்லாதவனாய், பிரஹ்மானந்த ரசானுபவத்தில் சக்தியுள்ள மனதினால் பாகியாந்தர விஷய ஞான மிலாதவனாய், ஞான பலத் தால், அன்யோன்ய விலக்ஷணமுள்ள குண தோஷங்கள், இஷ்டா நிஷ்டங்கள், சாதுக்கள், துஷ்டர்களால் செய்யப் படும் பூஜாவமானங்கள், முதலிய துவந்துவங்களில் ஒரு விகாரமுமின்றி சமபாவமுள்ளவனாய், நதிப் பிரவாகம் சமுத்திரத்தில் போலத் தன்னை யடைந்த விஷயங்கள் விகார முண்டாக்காது தன்மயமாகவே லயிக்கப் பெற் றவனாயுள்ள ஞானியான யதியே அவயந்த மற்ற ஸ்திதப் பிரகஞனாகிய ஜீவன் முக்தன். அவனே யபாரமான புண் யத்தின் பலனை யனுபவிப்போனும், பூஜ்யனுமாவன். இந்த ஞானிக்கு வஸ்துவின் ஏகத்துவ ஞானத்தாலேயே சர்வ வாசனைகளும் நாச மடைந்ததால் பூர்வ வாசனா வேகத்தால் பின்னும் சமசார சம்பந்தம் உண்டென் றுரைக்கக் கூடாது. அதிகாமுகனாது மனமும் மாதா விடத்தில் போவதில்லை. அதுபோலப் பூர்ணப் பிரஹ்மானந்தானு பவமுள்ள இவனுக்கும் பூர்வப்போல இருசிய சம்சார மில்லவே யில்லை. இருந்தால் பிரஹ்மத்தை யறிந்த ஞானி யல்ல. பகிர் முகனே யாவன்.

'பிரஹ்மைவாஹ' என்னும் ஞானாக்கினியால், ஸ்வப்னத்தில் செய்த புண்ய பாபங்கள், விழித்தவர்க்கு ஸ்வர்க்க நரகப் பிராப்தி ஹேதுவாகாது நசிப்பதுபோல் அனந்தங் கோடி கல்பமாய் ஆர்ஜ்ஜிக்கப்பட்ட சஞ்சித கர்மங்களும், ஆகாசம்போல அஸங்க உதாஸீனப் பிரஹ்மமாகத் தன்னை யறிந்ததால் கடாதிகளின் சங்கத்தால் ஆகாசத்தில் அவற்றினுள்ள மதயாதி வாசனைகள் பற்றாததுபோல ஆகாமிய கர்மங்களும், சேராது தகிக்கப்பட்டு நாச மடைந்துவிடும். 'கர்மமுண்டேல் பலனுமுண்டு, இல்லையேலில்லை' எனும் நியாயத்தால், கர்ம ஜன்ய சகாதி பலானுபவ முள்ளவரை கர்மம் விடாததால், சதா சமாதி நிஷ்டனான ஞானிக்கும் சில சமயம் பாகியப் பிரவிருத்தியும் பலானுபவமும் காணப்படலால், வியாக்கிர (புலி) புத்தியால் விடப்பட்ட பாணம் பசுவென் றறியினும் நில்லாது லக்ஷ்யத்தைச் சேதித்து விடுவதுபோல ஞானத்திற்கு முன் பூர்வமே யாரம்பித்த பிராரப்த கருமமும் தன் பலனைக் கொடாது விடாததால் 'ஞானிக்குப் பிராரப்தம் மாத்ரமுண்டு. அது அனுபவத்தினாலேயே நாசமாம்' என்று மித்யா பிராரப்தத்தைச் சுருதி சொல்லுகிறது. சொப்பனங் கண்டு விழித்தவன், அச்சொப்பன ஜகத்தையும், அதிலுள்ள மித்யா விஷயானுபவத்தினையும், அதில்கண்ட தேகத்தையும், அதற்குபயோகமான பிரபஞ்சத்தையும் ஜாக்கிரத்தின்கண் நான், எனது, இதுவென அறிதலுமின்றி ஜாக்கிரத்திலேயே சுகமாயிருப்பன், சொப்பனப் பற்றிருக்கின் நித்திரைவிட்டவனன்று. அதுபோலப் பிரஹ்மத்தோ டைக்கிய மடைந்து இதரத்தைப் பாராது சொப்பன ஸ்மரணம்போல போஜன விசர்ஜ்ஜனாதி செய்தும் உபாதி சங்கவிஹீன கேவலப் பிரஹ்மாகார மாகவே யென்று மிருக்கும் ஞானிகள் நிர்க்குணப் பிரஹ்மமே யாவதால் அவர்க்குத் திரிவிதமாயுள்ள கர்ம மற்பமுமில்லையென்றால் பிராரப்தம் மாத்திர முண்டென்ப தெப்படி? நனவுற்றவர்க்குக் கனவுண்டா?

கர்ம நிர்மிதமான தேகத்திற் கனுசரித்து ஞானிக்குப் பிராரப்த முண்டென்னில்? தேகாத்ம புத்தி யிருக்கும் வரை சித்தியாகு மது, அப்புத்தியை அடியோடு விட்டு 'அஜன், நித்யன், சாஸ்வதன்' என சுருதி கூறும் கர்ம சூன்யமின்றி யனுதியான நிர்மல ஆத்மாகாரமா யிருக்கும் ஞானிக்குப் பிராரப்த கல்பனை யெங்ஙன மிருக்கும்? பிராந்தி கற்பித அசத்திய தேகத்திற்குப் பிராரப்தத்தைக் கற்பிப்பதும் பிராந்தியே. கற்பித பதார்த்தம் எப்படி வஸ்துவாய்ப் பிறந்திருந் திறக்கும்? இங்ஙனம் எதற்கும் பிராரப்த மின்றெனின், சுருதியே கூறுவீானேன்? எனின், ஞானத்தால் காரிய சகித அஞ்ஞானம நசித்தபின் ஞானிக்கு தேகாதி எங்ஙன மிருக்கும்? என்றிவ்வாறு சங்கை செய்யும் பிராந்தி யுறுத மூடர்களுக்குச் சமாதானமாக சுருதியும் ஞானிக்கு மித்யா பிராரப்தத்தை பாஹ்ய திருஷ்டியால் ஏகதேசம் சொன்னதேயன்றி, ஞானிக்கு தேகாதிகள் சத்தியமாயுளது என நங்கீகரிக்கச் சொல்லவில்லை. அவனது திருஷ்டியில் ஆதியந்த ரகித, பரிபூர்ண, நித்ய, சத்ய, ஞான, ஆனந்தகன, அக்ரிய, அவிகார, அப்பிரமேய, அனந்த, பிரத்தியக், ஏகரசமாய், தள்ளவும் கொள்ளவுங் கூடாததாய், அதிசூக்ஷ்மமாய், அகம்புற மெங்கும் நிறைந்து நிராதார, நிர்க்குண, நிரஞ்ஜன, நிஷ்கள, நிர்விகற்ப சத்தா மாத்ரமாய், இப்படிப்பட்டதென்று மனதால் நிச்சயிக்கவும், வக்கால் சொல்லவும் கூடாத, வாங்மன அகோசரமாயுள்ள சாஸ்வத சித்த, சுத்தாத்விதீயப் பிரஹ்ம மொன்றே பிரகாசிக்கின்றது. இங்கு நானாவாய்த் தோன்றும் பேதம் சொற்பம்போதும் இல்லவேயில்லை. இவ்வேக ஸ்வரூபத்தை, போகத்தையும், போகேச்சையையும் நீக்கி, சாந்தி, தாந்திகளோடுங்கூடினமகாத்மாக்களான யதிகள் ஆத்மயோகத்தால் ஹிருதயத்தி லறிந்து, பரமானந்த முக்தி பெற்றனர். ஆதலால், புத்திரா! நீயும் தன் மயமான பரமானந்த பரமாத்மாவை, நிச்சல சமாதியா லுண்டா

கும் ஞான திருஷ்டியால் சம்சயமின்றிக் கண்டறியின், பின் சிரவணார்த்தத்தில் விகற்பமே யுண்டாகாது. அத ஞல் மனுே கற்பித பேத மோஹத்தை நீக்கி, ஞானி யாய், முக்தனுய், கிருதார்த்தனுய் ஆகக்கடவாய், சுருதி களைப்போலவே ஆசாரியரும் சாதாரணமாய் போ திப்பர். பந்தம், மோக்ஷம், பசி, திருப்தி, ரோகம், ஆரோக்கிய மிவற்றைத் தாங்களே யறிவர். மற்றோ ரனு மானிப்பர். அதுபோலப் பரமேசுவ ரானுக்கிரகத்தால் கிடைக்கும் தன் னனுபவத்தாலேயே விவேகி, பவசாக ரத்தைக் கடக்க வேண்டும். இங்ஙனம் தன் னக்ஞான கற்பித பந்தத்தின் மோக்ஷமுற்றுப் சச்சிதானந் தாத்மா கார மாதலில் சுருதி, யுக்தி, குருவசனம், அகத்திலுள்ள தன் னனுபவம் இவை பிரமாணங்களாம்.

, (வேதாந்த சாஸ்திரங்களில் சாரமாய்க் கூறியுள்ள சுழுப்தி, ஸ்தாணுபோலுள்ள பிரஹ்மமாகிய என்னில் அன்யம்போலக் காணப்படு மனைத்தும் அணுவுமில்லை. இருப்பவன் நானே எனப் பார்க்கும் வாத திருஷ்டி (1), சொப்பனம், இந்திர ஜாலம்போ லென்னி லன்யமாய்த் தோற்று மனைத்தும் மித்யை, நானே சத்தியன் எனக் காணும் மித்யா திருஷ்டி (2), சமுத்திரத்தில் பின்னம் போற் றோற்றும் பேன, புத்புத, தரங்காதி (நுரை, குமி ழி, அலை) யனைத்தும் சமுத்திரமே யாதல்போலும், சொப்பனத்தில் காணப்படு மனைத்து மதனைக்காணும் புருஷனே யாதல்போலும், ஸமுத்திரம், புருஷன்போன்ற ஏகசிதாகாசமான என்னிடத்தில் அன்யம்போற் காணப் படு மனைத்தும் நானே யெனத் தன் மயமாயப் பார்க்கும் பிரவிலாப திருஷ்டி (3) என்னும் இம்மூன்றில மனதிற் கிசைந்த எதனுலாவது திருசியத்தைத் தள்ளி, திருக்குரு வமிான அகண்ட நிர்மலாத்வைதப் பிரஹ்மத்தைத்தானுக அநுபவனே முக்தனும். இம்மூன்றும் ஞான சாதனமே யாயினும் தன் மயமாய்க் காணும் பிரவிலாப திருஷ்டியே

ஞானத்தில் சாப்வாத்தம் வழுவாம்)." அதனால் அகண்டாத்மாவாகிய தன்னைத் தானனுபவத்தாலறிந்து தன்மயமாய் எப்போதும் நிர்விற்பமாயிருக்க வேண்டும். அதிசயம் சொல்வானேன்? சகல ஜீவர்களும் பிரபஞ்சமும் பிரஹ்மமே. அகண்டாத்மவஸ்து அப்பிரஹ்மமாயிருத்தலே மோக்ஷம். சகல வேதாந்த சித்தாந்தத்தின் ரஹஸ்யமிதுவே, அச்சுருதிகளே யிதில் பிரமாணம்."

என்றுரைத்த குரு வசனத்தாலும், சுருதிப் பிரமாணத்தாலும், தன் யுக்தியாலும் ஆத்மதத்துவ மறிந்து இந்திரியங்களை யடக்கி, ஏகாக்கிர சித்தனாய், அப்பரமாத்மாவின்கண் நிச்சல சமாதி நிஷ்டனாய்ச் சொஞ்சக் காலமிருந்து பின்னெழுந்து குருவைப் பார்த்து, "குருவே! மகானுபாவா! அதிசாந்த மூர்த்தீ! அசங்க நித்யாத்வைதானந்தரஸப் பிரஹ்ம சொரூபா! அபார கிருபா சாகரா! நமஸ்காரம். (என்று நமஸ்கரித்துச் சீடன் தன் அனுபவம் கூறுகின்றான்), தங்கள் கடாக்ஷமாகிற சந்திரிகையால் பவதாபத்தா லுண்டான சிரமந் தீர்ந்து க்ஷணத்தில் அத்வைதானந்தபத மடைந்தேன். பிரஹ்மாத்மைக்கிய மறிந்ததால் பேதபுத்தி கெட்டது, பிரவிருத்தியாவும் விட்டது. இது என்றும் இதல்லவென்றும் ஒன்றும் தெரியவில்லை. சமுத்திரத்தில் சேர்ந்த ஆலங்கட்டியைப்போல் பிரஹ்மானந்த சமுத்திரத்தின் அம்சாம்ச லேசாலேசத்திற் கலந்து மனம் புகுந்து இன்னதென்றும் இவ்வளவென்றும் அறிதற்கசாத்தியமான அப்பிரஹ்மானந்த சாகரமேயாய் விட்டது. ஆ! ஆ! ஆனந்தாமிர்த நிரம்பியுள்ள இப்பிரஹ்மானந்த சாகரத்தின் பெருமையை நினைப்பதெப்படி? சொல்வதெப்படி? இப்போது பார்த்த ஜகத்தனைத்தும் காணவே காணோம்! எங்கு போயிற்றோ? யாரால் நீங்கிற்றோ?

---

*இத்திருஷ்டித்த நியாயம் மூலத்திலில்லை தமிழ் புஸ்தகத்தி லிருக்கின்றது.

தேகம் ஜலத்திலோ, ஸ்தலத்திலோ புரண்டு கிடக்கட்டும். கட தாமங்கள் ஆகாசத்தைப்போல அதன் தர்மங்களென்னைப் பற்றாது. கர்த்திருத்வ, போக்திருத்வ, கலத்துவ, ஜடத்துவ, மந்தத்துவ, பத்தத்துவ, முக்தத்துவாதி புத்தி தர்மங்கள் கேவலாத்வைதப் பிரஹ்மமாகும் எனக்கில்லை. மேக ஜாலங்கள் ஆகாசத்தை ஸ்பரிசிக்காததுபோலப் பத்து, நூறாயிரங்களாயுண்டாகும் பிரகிருதி [illegible]ங்களும் ஏக சிதாகாசமான என்னை ஸ்பரிசிக்காது. பிரகிருதி முதல ஸ்தூல பரியந்தமான இப்பிரபஞ்சம் சாயைபோலத் தோற்ற மாத்திரமாய் எதில் விளங்குகின்றதோ? ஸர்வாதாரமாய், சர்வத்தையும் பிரகாசிப்பிப்பதாய், ஸர்வாத்மாவாய், சர்வாகாரமாய், ஸர்வ வியாபியாய், ஸர்வ விலக்ஷணமாய், சர்வ சூனியமாய், மாயா விசேஷங்களொன்றுமின்றிப் பிரத்தியக்காய், ஸ்தூல புத்தி விருத்தியா லறிதற்கரியதாய், ஆகாச துல்யமாய், அதியந்தாஹிதமாய், அதி சூக்ஷ்மமாய், நிச்சல, நிஷ்கள, நிஷ்கிரிய, நிர்விகற்பமா யுள்ளது எதுவோ? அந்த சுத்த, கேவல, அகண்ட, நித்ய, சத்ய, ஞான, அனந்த, ஆனந்த, அத்விதீயப் பிரஹ்மமே நானாயிருக்கிறேன்.

ஸ்வாமீ! மாயையால் செய்யப்பட்ட ஜன்ம, ஜரா, மரண சம்சார வன ஸ்வபநத்தில் பிரமித்து, அதிலுள்ள தாப ஜாலங்களால் கிலேச முற்று அகங்காரப் புலியால் மிகவும் துன்ப மடைந்த என்னைக் கிருபையா லெழுப்பிப் பரமானந்தந் தந்து ரக்ஷித்தீரல்லவா? மகானுபாவா! தங்கள் கிருபாப் பிரஸாத மகிமையால் ஸ்வஸ்வரூப சாம்ராஜ்ய பாக்கியம் என்னாலு மடையப்பட்டதே! நானே தன்யன்! கிருத கிருத்தியன்! பவபந்தத்தினின்றும் முக்தனாய், பரிபூர்ண நித்தியானந்த ஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கின்றேன்!, ஆ! ஆ! எல்லாம் தங்கள் கிருபா வைபவம். தேசிகேந்திரா! பிரபஞ்ச மெல்லாமாய்ப் பிரகாசிக்கும்

ஏக, ஸத்திய, போதானந்த ஸ்வரூபமான தங்கள் பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்! பின்னும் பின்னும் நமஸ்காரம்! எப்போதும் நமஸ்காரம்!" ஏகாத்ம தத்துவத்தை யறிந்து ஆத்மானந்த முற்று இவ்வாறு தன்னை நமஸ்கரித்த ஸத் சிஷ்யனைப் பார்த்து மகாத்மாவான ஆசாரியேந்திரர் ஸந்தோஷ ஹிருதயத்தோடு பின்னும் மகத்தான இவ்வசனம் கூறுவா ருயினர்:— "நேத்திர முள்ளவனுக்கு ரூபமன்றிப் பார்க்க வேறில்லாதது போல பிரஹ்மவித்துக்கும் பிரஹ்மானுபவத்தை யன்றி புத்திக்கு விஷயம் வேறில்லாததாலும் ஸந்தோஷந்தரத் தக்கதாய்ப் பிரகாசிக்கும் பூர்ண சந்திரனை விட்டுச் சித்திர சந்திரனை யெவனு மிச்சியாததுபோல, இந்தப் பரமானந்த ரசானுபவத்தைவிட்டு அசத்திய விஷயத்தில் எந்த வித்வானும் ரமியா னுதலாலும், இவ்வசத்திய பதார்த்தானுபவத்தால் திருப்தி யற்படுமின்று, துக்கமும் போகாததாலும் சர்வப் பிரகாரத்தாலும் தன்னில் தோன்றும் ஜகமனைத்தும் தானேயாய் எங்கு மேகமாய்ப் பிரகாசிக்கும் சத்தியாத்வைதப் பிரஹ்மமாகும் தன்னையே ஞான திருஷ்டியால் அதி சாந்த மனதோடு சதா பார்த்து, எப்போது மகத்தில் சிந்தித்து சதா ஆத்ம நிஷ்டனாய்த் தன் அகண்டானந்த ரசானுபவத்திலேயே ரமிப்பவனாய், அதனாலேயே திருப்தனாய், நிர்விகல்ப, அகண்டஞானாத்மாவில் ஆகாச பட்டணம்போலத் தோன்றும் விகற்ப ஏதுவான புத்தி, அந்தப் பிரஹ்மா காரமாய் சும்மாவே யிருக்கும் நிரந்தரானந்த ஏதுவான பரமசாந்தி யடைந்து எப்போதும் மௌன முற்றவனாய் சுகமாய்க் காலந் தள்ளவேண்டும். வாசனாரஹித இவ்வுத்தம மௌனத்தையன்றி, ஆத்மாவை யறிந்த கண்டானந்த மனுபவிக்கும் பிரஹ்மவித்துக்களான மகான்களுக்கு சதானந்தானுபவ ஹேது வேறில்லை.

அப்பிரதிபந்த விருத்தியோடுங்கூடி யிவ்வாறு பிரஹ்மத்தை யறிந்த முனியானவன் ஆத்மாவிலேயே சதா ரமிப்பவனாய், போவன், வருவன், நிற்பன், இருப்பன், படுப்பன், இன்னுமெத்தனை விதங்களாகவோ இஷ்டப் பிரகாரம் நடப்பன். அவனுக்கு தேசம், காலம், ஆசனம், திக்கு, யமாதி, லக்ஷ்ய திருஷ்டி, முதலிய வொன்றுந் தேவையில்லை. தன்னை யறிதற்கு நியமங்களேதுக்கு? 'தேவதத்தன் நான்' என் றறிவதற்கு இதராபேக்ஷையில்லாததுபோல 'பிரஹ்மமே நான்' என்றறிவதற்கு ஒரு அபேக்ஷையுமில்லை. 'இது கடம்' என்றறிவதற்கு சுத்தமான நேத்திரத்தையன்றி வேறு நியமம் வேண்டாததைப்போல, நித்ய சித்தமான இவ்வாத்மாவும் மநோ விருத்தி சுத்தமாயிருக்கும்போது தானே பிரகாசிக்கின்றது. தேச, கால, சுத்தியாதி யபேக்ஷையில்லை. சூரியப் பிரகாசத்தால் ஜகத்தைப்போல யாதொன்றன் பிரகாசத்தால் சர்வ ஜகத்தும் பிரகாசிக்கின்றதோ? வேத, சாஸ்திர, புராண, விவித பூதங்களையும் பிரகாசிப்பித்து அறிந்துக்கொண்டிருக்கும் அந்தப் பிரஹ்மத்தைத் துச்சமான எந்த அஸத்ய அனாத்மா பிரகாசிப்பிக்கும்? இந்தப் பரமாத்மா சுயம்பிரகாசமாய், அனந்த சக்திகளோடுங்கூடி யெவராலு மறியப்படாது, அனைவரது 'அகம்' என்னும் அனுபவ சொரூபமாய், இருக்கும். இவ்வாத்மாவையே உத்தமோத்தமனாகிய பிரஹ்ம வித்துணர்ந்து, பந்தத்தினின்றும் விமுக்தனாய், நிரந்தரானந்த ரசானுபவ திருப்தனாய், அறியக்கூடாத லக்ஷணமுள்ளவனாய், அனுகூலப் பிரதிகூல பாகியவிஷயங்களில் சந்தோஷ, விசனம், ஆசை, நிராசை, எதுவுமின்றி பரேச்சையால் பொருந்தும் விஷயங்களை யெல்லாம் பாலர்போலனுபவித்து, பசி, தாகம், தேக பீடை யிவற்றைவிட்டுப் பாலன் க்ரீடா தற்பரனாய் சுகிப்பதுபோல, நிர்மம, நிரகங்காரனாய், சதா தன்

னிலேயே கிரீடித்துக்கொண்டும், தன்னிலேயே சுகித்துக் கொண்டு மிருப்பன். அகண்ட சிதம்பரத்தி லிருக்கு மவன், யாதொரு சிந்தனையும், தீனபாவமுமின்றி பிக்ஷை யெடுத்துண்டு, நதியாதி ஜலத்தைப் பானம் பண்ணி, தோய்த் துலர்த்தாத வஸ்திரம், வற்கலை (மர வுரி) தரித்து, அல்லது திகம்பரனாய், ஒரு நியமுமின்றி சுவதந்திரனாய், பாலர், பித்தர், பேயர்போலப் பூமியில் சரிக்கினும் வேதாந்த வீதியில் சஞ்சரிப்பவனாய், பூ (பூமி) மெத்தையில் படுத்து, நிர்ப்பயனாய்க் காடு, சுடுகாடு முத லெங்காவது நித்திரை செய்தும், சதா பிரஹ்மத்திலேயே கிரீடை யுள்ளவனாய், ஸர்வாத்மாவாயுள்ள தான் இஷ்டப் பிரகாரம் எத்தனையோ ரூபந்தரித்து எதனையேனும் அனு பவித்து ஓரிடம் மூடன், ஓரிடம் வித்வான், ஓரிடம் பிராந் தன், ஓரிடம் சாந்தன், ஓரிடம் மகாராஜன், ஓரிடம் அஜ கர (மலைப்பாம்பு) ஆசாரன், ஓரிடம் பூஜ்யன், ஓரிடம் நிந்தியன், என்ன ஒருவனே எங்கு மெவராலு மறியப் படாதவனாய் சஞ்சரிப்பன். அவன் நிர்த்தன னாயினும் சதானந்தி: அசகாய னாயினும் அதி பலவான். புசியா விடினும் நித்ய திருப்தன்: விஷமங்களில் சமதிருஷ்டி யுள் ளவன்: ஒன்றைச் செய்தும் செய்யாதவன்: புஜித்தும் புஜியாதவன்: சரீரியேனும் அசரீரி: பரிச்சின்ன னாயினும் பரிபூர்ணன்: இந்த சரீரமற்ற பந்த விமுக்தப் பிரஹ்ம வித்தினை தேகாபிமானிகட்குள்ள பிரிய, அப்பிரிய, சுக, துக்க, சுப, அசுபங்க ளொன்றும் ஸ்பரிசிக்காது. சூரி யன் ராகுவால் பிடிபடா திருக்கினும் பிடிபட்டதுபோலத் தோற்றலால் உண்மை யறியா மூடர் தம் பிராந்தியால் 'சூரியன் பிடிபட்டான்' என்பதுபோல, தேகாதி பந்த மற்ற பிரஹ்மவித்தும் தேகிபோல் தோற்றலால் 'இவன் தேகி' என்று தம் மயக்கத்தால் கூறுவர். அதனுண் மையா யிவனுக் கொன்றுமில்லை. இத்தேக பந்தம் விட்

டிருக்கும் முக்தனது தேகமும் பாம்பின் சட்டையைப் போலப் பிராணவாயுவா லங்கு மிங்குஞ்சரிக்கும். நதிப் பிரவாகத்தால் மேடு, பள்ளத்தை யடையும் தாருவைப் போல ஒவ்வோர் சமயம் பிராரப்தத்தால் முக்தன் தேக மும் போகத்தில் பொருந்தும். பிராரப்த கர்ம வாசனை களால் சம்சாரி தேகம்போலவே முக்தன் தேகமும் போகத்தில் பொருந்தினும் இவன் ஸாக்ஷிபோலவும் சக் கரமூலத்தைப்போலவும் சங்கற்ப, விகற்ப சூனியனாய், உதாசீனனாய், மௌனமாகவே யிருப்பன். இந்திரியங் களை விஷயங்களில் சேர்க்கான் அதில்நின்றும் பிரிக்கான். அக்கர்ம பலனையும் அகண்டானந்த ரச பானத்தால் மத் தனான அவன் சிறிது மடைய மாட்டான். லக்ஷியா லக்ஷியங்களை விட்டுக் கேவ லாத்மாவா யிருக்கும் அப் பிரஹ்ம வித்தானவன் சாக்ஷாத் பரமேசுவரனே ஸம்சய மில்லை.

ஒரு நடன் வேஷம் கொண்டபோதும், விட்டபோ தும் புருஷனே யாவதுபோல கிருத கிருத்தியனாய் தேகா தியுபாதிகளோடுங்கூடி ஜீவித்திருக்கும்போதே பிரஹ்மா காரமாய் சதா முக்தனான அந்தப் பிரஹ்மஞானி, உபாதி நாசத்திலும் பிரஹ்மா காரமேயாய் பிரஹ்மத்தையே யடைகின்றான். மரத்தின் பழுத்த இலையானது நதி, வாய்க்கால், வீதி, சிவாலயம் முதலிய எங்கு விழுந்தாலும் சுபாசுபம் மரத்திற் கின்மைபோல முன்னமே ஞானக்கி னியால் தகிக்கப்பட்ட ஞானியின் தேகம் எவ்விடத்தில் விழுந்தாலும் இவனுக் கா (னி) யில்லை. பத்திர, புஷ்ப, பலாதிகள்போலத் தேகேந்திரியப் பிராண, புத்தியாதி யபாதிகள் நசிக்குமேயன்றி மரம்போ லிருக்கும் சச்சிதா னந்த தாத்மா ஒருபோதும் நாசமுறாது. சுருதியும் 'உபா தி, விகாரமுள்ளதற்கே நாசமென்றும், பிரஞ்ஞானகன

ஆத்மா, ஸத்யன், நாச ரஹிதன்' என்றுங் கூறி யிருக்கிறது. பூர்ணாத்வைதானந்தப் பிரஹ்மமாய் சத்ரூபப் பிரஹ்மத்தில் நிஷ்டனாயுள்ள முனிக்கு, தோல், மாமிச, மல பிண்டமான தேகத்தை விடுக்க தேசகாலாதி யபேக்ஷையில்லை. என்னை? தேகத்தின் மோக்ஷ (நீக்க)மும், தண்ட, கமண்டலங்களின் மோக்ஷமும் மோக்ஷமன்று. அக்ஞான ஹிருதயக் கிரந்தியின் மோக்ஷமே, யுக்திகளுக்குச் சம்மதமான மோக்ஷமாம். கல், மரம், திருணம், தான்யம், பாய், படம், கடம், முதலியன தகிக்கப்பட்டு மண் மயமே யாதல்போல தேகாதி திருசியோபாதிகளனைத்தும் ஞானாக்கினியால் தகிக்கப்பட்டு ஞானாகாரமேயாய், ஆதித்தப் பிரகாசத்தில் அந்தகாரம்போலப் பிரஹ்மத்தில் லயமாகி விடும். கடமுடைந்தால் கடாகாசம் மகாகாச மாவதுபோல உபாதி நீங்கவே பாலில் பாலும், ஜலத்தில் ஜலமும், தைலத்தில் தைலமும், போல பிரஹ்மத்தின்கண், பிரஹ்மமாய் விளங்கும் ஜீவன் முக்தனாகிய ஞானியும் கலந்து எப்போது மேகமாய்ப் பிரகாசிப்பன். இங்ஙனம் சன்மாத்திராகண்ட பிரஹ்ம பாவ முற்றிருக்கும் விதேக கைவல்ய மடைந்த யதிமீண்டு ஜனிப்பதேயில்லை. ஆத்மபர ஐக்கிய ஞானாக்கினியால் அவித்தையாதி தேகோபாதிகள் தகிக்கப்பட்டுப் பிரஹ்மா காரமாகவே யிருக்கும் யதிக்கு புனர் ஜன்மம் எங்ஙனமுண்டாம்? மித்யா சர்ப்பத்தின் தோற்றமும், நாசமும் ரஜ்ஜுவில் உண்மையில் இல்லாததுபோல, நாசரஹித, நித்ய, அசங்க, அத்வைத, கேவல, ஞான ஆத்மவஸ்துவில், உண்டு இல்லை யெனப்பட்டதெல்லாம் புத்தியின் தர்மங்களேயன்றி உண்மையி லின்மையின் அப்புத்திகற்பிதமாய் மேகத்தால்வந்த தன் நேத்திராவரணத்தை, யறியா தான் ஆதித்தனில் ஆரோபிப்பதுபோல மூடர்களால் விருதாவாய் ஆரோபிக்கப்பட்ட மாயாகிருத பந்தமோக்ஷங்

களுமில்லேயில்லை பிரஹ்மத்திலன்ய மாயெத்துவுமின்மை யின், ஆவரணசக்தியால் பந்தமென்றும், ஆவரண நாசத் தால் மோக்ஷமென்றும் சொல்லக்கூடாது. சொல்லின் அத்வைத ஹானியும் த்வைதப்பிரதீதியும் சித்தியாகும். இது வேதங்களுக்கு சம்மதமாகாது. நிஷ்கள, நிர்மல, நிஷ்கிரிய, நிரஞ்ஜனமாய், ஆகாசம்போலப் பூர்ணமா யிருக்கும் அவ்விசாந்த அத்விதீயப் பிரஹ்மத்தில் கற் பனை யெங்கிருக்கும்? 'உத்பத்தியில்லை, நாசமில்லை, பத்த னில்லை, சாதகனில்லை, முமுக்ஷுவில்லை, முக்தனுமில்லை இதுவே பரமார்த்தம்' என்ச் ச்ருதியும் கோஷிக்கின்றது. ஸகலவேதாந்தத்தின் சித்தாந்தமாய், ரகசியங்களில் தி ரஹஸ்யமான இது சிஷ்யனே! என்னால் உனக்குத் தெரி விக்கப்பட்டது. கலிதோஷமற்று விரக்தனான முமுக்ஷு வைப் பலதரம் பரீக்ஷித்து நீயுமிதனை யுபதேசிப்பாயாக."

என்றிவ்வாறுரைத்த குருவசனத்தைக் கேட்ட சிஷ்யன் அனேகநமஸ்காரங்கள் செய்து குருவினுத்தரவு பெற்று ஆனந்தமாய்ப் போயினன். ஆசாரியரும் பரமானந்த சமுத்திரத்தில் மூழ்கினவராய் ஜகத்தைப் பவித்திரமாக்கும் பொருட்டெங்கும் சஞ்சரித்தனர்.

இவ்விதமாய் முமுக்ஷுக்களுக்கு சுலபமாய் போதமாம் வண்ணம், குரு, சிஷ்ய ஸம்வாதமாய் ஆத்மலக்ஷண மறிவிக்கப்பட்டது. நிஷ்காம விஹிதகர்மத்தால் சமஸ்த சித்த தோஷங்களுமற்று சம்சார சுகவிரக்தராய், சாந்த சித்தராய், ச்ருதியை நம்பின முமுக்ஷுக்களாயுள்ள உத்தமயதிகள் ஹிதமான இவ்வுபதேசத்தை ஆதரிப்பார்களாக.

ஸம்சார கோரவனத்தில் தாபத்திரயமாகும் கடோர ரவியிலாலுண்டான தாகதுக்கத்தால் மிக்கக்லேசமுற்று, ஜலாசையால் மருபூமியில் பிரமித்து அலைந்து கஷ்டப்

படும் ஜீவர்கள் சுகமடையும் பொருட்டு, அதிசமீபத்தி லுள்ள அத்வயப் பிரஹ்மானந்த அமிருதசாகரத்தைத் தெரிவிக்க ஸ்ரீமத் ஜகத்குரு சங்கரபகவத் பாதாசாரியரா லனுக்கிரகித்த சுககரமான இந்த 'விவேக சூடாமணி'க் கிரந்தமானது அகத்தியம் சாசுவத மோக்ஷானந்தத்தைக் கொடுக்கும் சம்சயமேயில்லை. சுபம்.

ஸ்ரீசங்கரபகவத்பாத

குருவாழ்க

ஸ்ரீவிவேக சூடாமணி

சமாப்தம்.

ஓம் தத்ஸத் பிரஹ்மார்ப்பணமஸ்து

ஹரி: ஓம்.